பெரிபுளூஸ்

(படங்களுடன்)


மொழிபெயர்ப்பாளர்

இலக்கண விளக்க ஆசிரியர் பரம்பரை

திரு. சோமசுந்தர தேசிகர்

 [விலை அணா 10

PRINTED AT
THE ROYAL PRINTING WORKS,
MOUNT ROAD : : MADRAS


Rann of Cutch
கட்ச் குடா
குஜராத்
காம்பே
மேஸ் நதி
உசேனி
(புரோச்)
பாரிகாசா
பயோனீஸ்
சோமநாத்
சூரத்
காம்பே குடா
சோபாரா
கல்யாணு
பம்பாய்
பெய்தாணு
செமில்லா
மண்டகோரா
கோதாவரி நதி
பழையபட்டினம்
மெழிசிக்கரை
ஆரிய க
மஸூலிபட்டிணம்
பைசாண்டியம்
தோகரம்
அருணபோஅஸ்
செகிரினி தீவு



பெரிபுளூசிற் கண்ட சில பட்டினங்கள்.

உ

பெரிப்ளூஸ்

முன்னுரை

சில ஆண்டுகட்கு முன்வரையில் தமிழ்நாடு அல்லது தமிழகம் என்று ஒன்று உண்டென்றும், அதனில் மக்கள் வாழ்ந்து வருகின்றனரென்றும், அவர்கள் நாகரிகம் வாய்ந்தவர்கள் என்றும் ஒப்புக்கொள்வதே மிக்க அரிதாக இருந்தது. இவைகட்குக் காரணம் தென்னாடு வானரர்களால் நிறைந்திருந்தது; அவர்கள் கந்தமூலபலாதிகளை யுண்டு வாழ்ந்தனர் என்பதுபோன்ற தொடர்மொழிகளுக்கு உண்மைப்பொருள் காணமாட்டாமையும், பண்டை நூல்களையும் வழக்குக்களையும் அறியாமையுமேயாம்.

அச்சுவாகன முண்டாகிய இக்காலத்து மஹா மஹோபாத்யாய பிரமஸ்ரீ டாக்ட்டர் வே. சாமிநாதையரவர்கள், ராவ்பகதூர் சி. வை. தாமோதரம் பிள்ளை போன்ற பெரியோர் அநேகர் தோன்றிப் பழந் தமிழ் நூல்களைத் தோண்டியெடுத்து உலகினர்க்குப் பயன்படுமாறு அளித்து வருவது யாவரு மறிந்ததே யாயினும், இவர்கள் தமிழ்ப் பாஷையிலேயே பெரும்புகழ் பெற்றிருப்பதாலும், நூல்களை வெளியிடுவதாலும், ராஜபாஷையாகவும் உலகமுழுதும் பரவியுள்ள பாஷையாகவுமுள்ள ஆங்கிலபாஷையில் அவைகளோ அவற்றின் பொருளோ வெளிப்படாமையாலும், சிறிது தமிழ்கற்ற பெரிய ஆங்கில விற்பன்னர்களான தமிழர்களும் தமிழ்மொழியைப் புறக்கணித்தலினாலும் தமிழ்நாட்டின் பெருமை வெளிப்படாமலிருக்கிறது; எனினும் காலஞ்சென்ற ராவ்பகதூர் பி. சுந்தரம் பிள்ளை, வே. கனக

சபைப் பிள்ளை, டாக்டர் கிருஷ்ணசாமி ஐயங்கார் போன்றோர் முன்வந்து தம்மாலியன்ற உதவி புரிந்ததனாற்றான் தமிழிலும் நூல்களிருக்கின்றன, தமிழரும் நாகரிகமுடைய மக்கள் என்று கருத இடம் தந்தது. இவ்வழியில் அதிகமாக உழைத்த ஓலைநாயகரான (*Postal Superintendent*) வே. கனகசபைப் பிள்ளையவர்களை உள்ளளவும் நினைவு கூருது எள்ளளவும் மறப்போமானால் செய்ந்நன்றி கொன்ற மகாராவோம். அவர்கள் தாம் முதன்முதலாக மேனாட்டு யவனாசிரியர்கள் எழுதிய நூல்களிலிருந்து தமிழகத்தைச் சார்ந்த விடயங்களைத் தமது 1800 வருடங்கட்கு முந்திய தமிழர் என்னும் நூலில் வெளியிட்டார்கள்.

அதுமுதல் இதுவரை அவர்களைப்போன்று மற்றும் யாராவது செய்துளார் என்று சொல்ல என் சிற்றறிவிற்குப் புலப்படவில்லை.* ஈண்டு யவனர்களென்றது கிரேக்க உரோமர்களையேயாம். இந்நாட்டைப்பற்றி எழுதியோர் எரதோத்தஸ், பெரிபுளூஸ், பிளினி, தாலமி, ஸ்டிராபோ, அரியேன் முதலியோராவர். தமிழராயுள்ள நாம் அவர்கள் நம்மைப்பற்றி என்ன எழுதியிருக்கின்றனர் என்று தெரிந்துகொள்ளவேண்டுவது நமது முக்கிய கடமைகளிலொன்று என்பதை நம் நாட்டினர் ஒருபொழுதும் கருதுவதே இல்லை. 'ராமனாண்டாலென்ன ராவணனாண்டாலென்ன' என்ற பழஞ்சொல்லைப் பொன்னேபோற் போற்றி வருகின்றோம்.

யவனபாஷைகளில் எழுதியவர்களில் பெரிபுளூஸ் என்னும் நூலை எழுதியவர்தாம் முதன் முதலில் இந்நாடு வந்து சென்றனரென்று மேனாட்டு ஆசிரியர்கள் கருதுகின்

* இதுபொழுது திரு கே. என். சிவராஜ பிள்ளையவர்கள், பழந்தமிழர் கால அட்டவணை என்ற நூல் வெளியிட்டுள்ளார்.

றனர். அதற்கு முன்னெல்லாம் தமிழரை அரேபியர்களும் எகிப்தியர்களும் நன்கறிந்து வாணிபஞ் செய்தும், மற்றை யோர் அறியாதபடி மறைத்தும் வைத்திருந்தனராம். இவைகளை உட்புகுந்து வெளியிட்டவர் இப்பாலஸ் என்னும் கிரேக்க எகிப்தியராவர். இதனைக் கண்டவுடன் ஊரும் பேரும் வெளியிடாத ஒருவர் மரக்கல மிவர்ந்து தென்னாட்டில் மேற்குக்கரை வந்து, தாம் நேரிற்கண்டவற்றைக் குறித்துச்சென்று, உரோமதேசத்தில் வெளியிட்டார்.† கடலிற் பயணம் போய் வருவதற்குற்ற அடையாளங்களைக் குறிக்கும் கையேட்டிற்குப் பேரிபுளூஸ் என்று கிரேக்க பாஷையில் பேயர். கிரேக்கர்கள் இந்துமகா சமுத்திரத்தைச் செங்கடல் என்றே பெயரிட்டிருப்பதால் அவர் எழுதிய நூலுக்கு பேரிபுளூஸ் ஆவ் தி எரித்திரியன் ஸீ (*Periplus of the Erythrean Sea*) என்று பெயர். செங்கடல் அரபிக்கடலுக்கு மேற்புற மிருப்பதாலும், செங்கடல் புகுந்தே ஈண்டு வரவேண்டி யிருப்பதாலும், இப்பெயரிட்டனர் போலும். இதுவே முதன்முதலாக இந்தியாவைப் பற்றி நேரிற்கண்டபின் எழுதிய நூலாகும். இது முதலில் கிரேக்க பாஷையில் எழுதப்பட்டுப் பின்னர் லத்தீன் இத்தாலிய பாஷைகளில் மொழி பெயர்க்கப்பட்டது. வெகு காலங்கழித்து இதனை ஜர்மானியர் தங்கள் மொழியிலாக்கிக்கொண்டனர். முதன்முதலாக ஆங்கிலத்தில் 1800-ஆம் ஆண்டில் உவில்லியம் வின்செண்டு என்பார் மொழிபெயர்த்து இலண்டனில் பிரசுரித்தார். 1879-ஆம் ஆண்டில் மாக்கிரிண்டில் என்பார் மொழிபெயர்த்துக் கல்கத்தாவில் வெளிப்படுத்தினர். 1912-ல் உவில்பிரடு

---

†இவருடைய காலம் 80 A.D. ஆக இருக்கலாமென்பது ஷாப் அபிப்பிராயம். V. Smith's Early History of India P. 245, IV Edn.

எச். ஷாப் (*W. H. Schoff*) என்ற அமெரிக்கர் கிரேக்க பாஷையிலிருந்து புதிதாக நேரே மொழிபெயர்த்ததோடு நில்லாமல் வேண்டிய குறிப்புக்களையும் எழுதி பிலாடேல்பியா நகரத்தில் வெளியிட்டனர். அவர்கள் அநுமதி பெற்றே இப்பொழுது இந்நூல் என்னால் மொழிபெயர்க்கப்படுகின்றது. இந்நூலின் மூலம் 66 பகுதிகளையுடையது. ஆயினும் அதனை யறிந்து கொள்ள எழுதப்படும் குறிப்புக்கள் முக்கியமானவை. தமிழருக்கு அவசியமான குறிப்புக்கள் மாத்திரம் வேண்டிய அளவு எழுதப்படுகின்றன.

இவ் வேலைக்கு யான் எள்ளளவாவது தகுதியற்றவனாயினும், ஆங்கிலத்திலும் தமிழிலும் தக்க புலமையுடையார் பலர் இதனைக் கண்ணுற்ற பிறகாவது இதுபோன்று தென்னாடு சம்பந்தமான மற்றைய நூல்களை வெளிப்படுத்த முன் வருவார்களென்றெண்ணி இக்காரியத்தில் தலையிட்டேன். இதனில் காணப்படும் குற்றங் குறைகளை விடுத்து விஷயத்தையே பெரிதாகக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

மயிலாப்பூர், ஜனவரி, 33.

இலக்கண விளக்க ஆசிரியர் பரம்பரை,
திருவாரூர்-சோமசுந்தர தேசிகன்.

எரித்திரேயன்கடலைச் சுற்றிய யாத்திரை

1. எரித்திரேயன்[1] கடலில் ஸ்தாபிக்கப்பட்ட[2] துறைமுகங்களிலும் அதனைச் சார்ந்த நாளங்காடிப் பட்டினங்களிலும்[3] முசல்[4] துறைமுகந்தான் முதலானது. அதனில் எகிப்தியர் வாணிபஞ் செய்கின்றனர். அங்கிருந்து வலது பக்கமாகப் போகிறவர்களுக்கு 1800 ஸ்டேடியாவில்[5] பெரனிஸ்[6] என்ற துறைமுகம் தென்படும்.

---

1. (1) எரித்திரேயன் என்ற சொல் உரோம கிரேக்கர்களால் இந்து மகாசமுத்திரத்துக்கும், அதனோடுசேர்ந்த செங்கடல் பாரசீக வளைகுடாவிற்கும் ஏற்படுத்தப்பட்ட பெயர். எரித்திரா என்ற சொல் சிவப்பு எனப் பொருள்படும். தெலுங்கில் எர்ர என்ற சொல் சிவப்பைக் குறிக்கும். அகதார்க்கிடஸ் என்பவர் எரித்திர அரசன் கடல் என்று கொண்டு அதற்குக் கதையும் கூறுவர்.

(2) சட்டப்படி ஸ்தாபிக்கப்பட்டது என்று பொருள். இவைகள் அரசனால் ஏற்படுத்தப்பட்டுச் சுங்கங்களை யுடையனவாய், தண்டத் தலைவர்களாற் காக்கப்பட்டு வந்தன.

(3) Market towns.

(4) Mussel harbour:—இதுபொழுது Ras Abu-Somer என்றழைக்கப்படுகிறது.

(5) உரோம நீட்டலளவை. பெரிபுளூஸுக்குப் பத்து ஸ்டேடியா 5280 ஜாதியடி கொண்ட ஓர் ஆங்கில மைல் எனக் கொள்ளலாம்.

(6) Berenice, இதுபொழுது Umm-el-Ketef Bay என்பர். இத் துறைமுகத்தில் இயற்கையான மரக்கலச் சாலையுண்டு. கோப்டோஸ் (Coptos) என்ற ஊரிலிருந்து குறுக்கே பாலை நிலத்தின் வழியே பதினொருநாட் பயணத்தில் இருக்கின்றது. இந்நகர் பாழடைந்திருப்பதை இன்றுங் காணலாம். இந்நகர் பெரிபுளூஸ் காலத்தில் எகிப்தியர் கீழ்நாட்டு வியாபாரஞ் செய்ய முக்கிய துறைமுகமாகக் கொண்டிருக்கவேண்டுமென்று தெரிகிறது.

இந்த இரண்டு துறைமுகங்களும் எரித்திரேயன் கடலில் எகிப்திய நாட்டு எல்லைக்கரையிலுள்ளவை. இவை யிரண்டும் கப்பல் தங்குதற்குத் தகுதியானவை.

2. டொரனிஸுக்குக் கீழே வலது பக்கமாகப் பெர்பர் தேச[1] மிருக்கிறது. அந்நாட்டில் கடற்கரையோரத்தி லுள்ள ஜனங்கள் மீன்களையுண்டு குறுகின பள்ளத்தாக்கு களில் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் காணப்படும் மலைக் குடைவுகளில் வாழ்கின்றனர். உள்நாட்டிலே பெர் பர் ஜாதியார் இருக்கின்றனர். அவர்களை யடுத்துப் பச்சை யிறைச்சிகளை[2] யுண்டு வாழ்நரும், சாக பக்ஷிணி களும் தங்கள் தங்கள் தலைவரின் கீழ் வாழ்கின்றனர். இவர்களையும் கடந்து உள்நாட்டில் மேல் புறமாகச் சென் ருல் மெரோயி[3] என்றொரு பட்டணமிருக்கிறது.

3. (முற்கூறிய) சாகபக்ஷிணிகள் நாட்டுக்குத் தெற் கில் 4000 ஸ்டேடியா கடற்பிரயாணஞ் செய்தால் வேடர்க

---

2. (1) Berber Country என்பது ஆங்கிலச்சொல். காட்டு முரண்டிகள் நாடு என்பது பொருள். இது வட ஆபிரிக்காவில் இன்றும் வழங்குமொரு பெயர். ஆதியில் எகிப்தியர் மிருகத் தன்மை வாய்ந்தவர்களையும், புறநாட்டாரையும் குறிக்க இச் சொல்லை வழங்கினர். கிரேக்கர் எகிப்தியரைப் பின்பற்றி அப் பெயராலே அவர்களை அழைக்கலாயினர். பெர்பர் ஜாதியார் நீல நதிக்கும் செங்கடலுக்கும் நடுவிலுள்ள பிரதேசமான அபிஸினியா, சோமாலி, கல்லாஸ் (Callas) முதலான நாடுகளில் வாழ்பவரென ஷாப் அபிப்பிராயப்படுகிருர்.

(2) Wild-Flesh-Eaters and Calf-Eaters. இவைகள் கிரேக்கர்களால் இடப்பட்ட பெயரென்று கருதப்படுகின்றன. இவர்களைப் பற்றிய விவரம் ஒன்றும் அறிவதற்கில்லை

(3) Meroe: நியூபியா நாட்டின் தலை நகரம். கி. மு. 650-ல் ஸ்தாபிக்கப்பட்டுப் பெரிபுளூஸ் காலத்திற்குப் பின்னுமிருந்தது. இது நீல நதிக்கரையிலிருந்தது.

விருப்பிடமும் அங்காடிப் பட்டினமுமான தாலமே[1] இருக்கிறது. அங்குள்ள வேடர்கள் உள்நாட்டுக்குச் செல்கின்றனர். இங்கேதான் சிறிதளவு நாட்டு ஆமையோடு கிடைக்கின்றது; அவ்வோடுகள் வெண்மையாயும் சிறியவையாயுமிருக்கும். அடுலிஸைப் போலச் சிறிதளவு யானை மருப்பும் கிடைக்கின்றது. எனினும் இவ்வூரில் நல்லதொரு மரக்கலச்சாலை யில்லாததால் சிறிய படகுகளில் இவ்வூருக்கு வரவேண்டி யிருக்கின்றது.

4. வேடர்களின் தாலமே பட்டினத்துக்குக்கீழ் 3000 ஸ்டேடியா அளவில் அடுலிஸ் என்ற, நிர்மாணிக்கப்பட்ட துறைமுகமிருக்கிறது.[1] இது நாட்டினுள்ளே தென்புறமாகச் சென்று விசாலமாகும் ஒரு விரிகுடாவின் கடைக்கோடியிலிருக்கிறது. முகத்துவாரத்தின் முன்னே இருநூறு ஸ்டேடியா அளவில் மலைத்தீவு என்ற தீவு இருக்கின்றது. நாட்டின்கரை இந்தத் தீவை வளைந்து ஓடுகிறது. அடுலுஸுக்கு வரும் கப்பல்கள் திருடருக்கு

---

3. (1) Ptolemais. இது இப்பொழுது எர்றீ (Er-rih) என்று வழங்குகிற தீவு. 18° 29′ N., 38° 27′ E. கி. மு. 285 முதல் 246 வரை (கலி 2777 முதல் 2816 வரை) அரசாண்ட தாலமி பிடால்பஸ் என்பவனால் அரண் செய்யப்பட்டது. யானை வியாபாரம் அதிகமாக விருந்தது. முற்காலத்தில் எகிப்தியர் இந்தியாவிலிருந்து யானைகளைக் கொண்டுவந்து வர்த்தகஞ்செய்தனர். அவை விலை அதிகமாகவிருந்தமையால் தாலமி பிடால்பஸ் நாட்டாருக்கு விரோதமாகத் தன் ஆட்களை யனுப்பிக் காடுகளில் யானை பிடிக்கச் செய்தனன்.

4. (1) இது இப்பொழுது ஸூலா (Zula) என்ற ஊராக மாறியிருக்கிறது. இங்கே ஊர் இருந்து அழிந்துபோன சின்னங்கள் காணப்படுகின்றன. தற்பொழுது துறைமுகமாக விருப்பது மாஸோவா என்ற பட்டினம்.

அஞ்சி இந்தத் தீவில் தங்குகின்றன. முற்காலத்தில் விரிகுடாவின் வாயிலில் கரையோரமாகவிருக்கும் டியோடோரஸ் என்ற தீவில் தங்குவது வழக்கம்; இதற்குத் தரைப் பாதையும் உண்டு. இவ்வழியாக முருடரான அந்நாட்டினர் வந்து துன்புறுத்துவர். மலைத்தீவுக்கு எதிரில் நாட்டுக்குள் இருபது ஸ்டேடியா அளவில் அடுலிஸ் என்ற நடுத்தரக் கிராமம் இருக்கிறது; அங்கிருந்து மூன்று நாட் பயணம் உள் நாட்டிற் சென்றால் கொலோயி (Coloe)[2] என்ற ஊரை யடையலாம். இதுதான் யானை மருப்புக்கு[3] முதல் வியாபார ஸ்தலம். அக்ஸுமைட்ஸ் ஜாதியார் வசிக்கும் பட்டினத்திற்குச்[4] செல்ல ஐந்து நாள் வேண்டும்; நீல நதிக்கு அப்

---

(2) கோலோயி அழிந்து போன பட்டினமாகக் கோஹைதோ (Kohaito) என்ற இடத்தில் இருக்க, பெண்ட் (Bent) கண்டனர். சுற்றிலுமுள்ள நாடுகளுக்கு மேலாக இப்பட்டினம் 7000 அடி உயரமுள்ள சமபூமியாக விருப்பதால் வாசயோக்யமுள்ளதாக விருக்கிறது. இது தலைமைப் பட்டினமாயும் இதற்கு அடுலிஸ் துறை முகமாயு மிருந்திருக்கவேண்டும்.

(3) யானை மருப்பு. கி. மு. 2600-ல் (கலி 1500) எகிப்தை யாண்ட மெர்னெறி யரசன் காலத்துக் கல்வெட்டொன்றில் ஓர் அசுவப் பெருமகனுர் (Assuan noble) யானை மருப்பில் வாணிகஞ் செய்ததாகக் காணப்படுகின்றது. அவர் தாம் தென் நியூபியாவிலுள்ள யமீம் நாட்டினின்றும் சாம்பிராணி, கருங்காலி, தானியம், புலித்தோல் தந்தம் முதலியன 300 கழுதைப் பொதிகளிற் கொண்டு வந்ததாகக் கூறுகின்றனர். தந்தங்கள் அக்காலத்து நடந்த வியாபாரப் பொருள்களில் ஒன்றென்பதற்கு அநேக ஆதாரங்களிருக்கின்றன.

(4) அக்ஸுமைடரின் பட்டினம்:—இது இப்பொழுது ஆபிரிக்காவிலுள்ள அபிசீனியா வென்னும் நாட்டின் தலைநகர். அபிசீனியா வென்பது ஹாபாஷ் என்பதன் உரோம மொழிபெயர்ப்பு. இவர்கள் தங்களை ஏதியோப்பியவன் என்று சொல்லிக்கொள்ளு

பாலுள்ள பிரதேசத்திற் கிடைக்கும் யானைமருப்பு முழுவதும் கெய்னியம்[5] என்ற நகரின் வழியாக இங்கே கொண்டுவரப்படுகிறது ; பின்னர் அடுலிஸுக்குக் கொண்டு போகப்படுகிறது. சில காலங்களில் கடற்கரையோரமாய் அடுலிஸுக்கு அருகில் யானைகளும், காண்டாமிருகங்களும், வேட்டையாடப்பட்டபோதிலும் பெரும்பாலன உள்நாட்டிலேயே வேட்டையாடப்படுகின்றன. அடுலிஸ் முகத்துவாரத்துக்கு வலது பக்கமாகக் கடலில் அலலே[6] என்ற பேருடைய பல மணல் திட்டுகள் இருக்கின்றன. அவற்றிலொதுங்கும் ஆமைகளைக் கரையார்கள்[7] கொன்று

கின்றனர். அந்நாட்டு மொழியில் ஹாபாஷ் என்பதற்கு சேர்ப்போரென்று பொருள். சாம்பிராணிப் பாலைச் சேர்ப்பதால் இவர்கட்கு இப்பெயர் வந்தது போலும். இவர்கள் கி. பி. 330-ல் (கலி 3430) கிறிஸ்தவர்களாக்கப்பட்டனர். அதற்கு முன்னர் இவர்கள் பௌத்தர்களாக இருந்திருக்கவேண்டும். அக்ஸம் என்ற பட்டினத்தில் கருடகம்பம் போன்ற ஒரே கல்லாலான கம்பங்கள் காணப்படுகின்றன. ஜேம்ஸ் பேர்குஸன் என்னும் ஓவியக்கலைஞர் தமது சிற்ப நூலில் (i, 142-3) "அக்ஸத்திலுள்ள அப்பெரிய கற்கம்பம் இந்தியக் கூட்டுறவால் ஏற்பட்டது ; ஒன்பது தளங்களோடு கூடிய கோபுரமமைந்த இந்தியர் கோயில் கி. பி. முதல் நூற்றாண்டில் எகிப்தில் கட்டப்பட்டிருக்கிறது" என்பர். இவைகளெல்லாம் இந்திய வாணிபத்திற்கு அநுகூலமாகவிருந்தன.

(5) கெய்னியம் (Cyeneum) என்பது கிழக்குச் சூடானிலுள்ள (Eastern Sudan) தற்போதைய சென்னார் (Sennaar) என்ற ஊர்.

(6) அலலேத் தீவுகள் (Alalæi) :—இவைகள் இன்றும் இவ்வாறே பெயர் பெறுகின்றனவாயினும் தகலக் (Dahalak) என்று பொதுவாகக் கூறுவர். அன்னஸ்லி சூடாவிற்கு நுழையும் முகத்துவாரத்திலுள்ளன.

(7) கரையார் - (Fish—eaters).

அவற்றின் ஓடுகளைச் சந்தைக்கு விற்பனைக்குக் கொண்டு வருகின்றனர்.

5. மேற்கூறிய துறைமுகத்துக்குக் கீழே எண்ணூறு ஸ்டேடியா அளவில் ஓர் ஆழமான துறையிருக்கின்றது [1]. இதன் முகத்துவாரத்தின் வலப்புரத்தில் ஒரு பெரிய மணற்குன்று இருக்கிறது. இங்கே ஆப்ஸியன் (*Opsian*) கற்கள்[2] அகப்படுகின்றன. சாகபக்ஷணிகள் நாட்டிலிருந்து பெர்பர் நாடு வரையிலுள்ள நிலப்பரப்பை, சொஸ்கலஸ் (*Zoscales*) என்ற அரசன் ஆளுகிறான். இவன் மிருந்த

---

5 (1). இந்த இடத்தை ஹொஆகில் குடா (Hauakil) என்கின்றனர். இது 14° 44′ N., 40° 49′ E.-ல் உள்ள ராஸ் ஹான்பிலாவுக்கு வடக்கேயிருக்கின்றது. ஹான்பிலாவை அர்டிமிடோரவின் (Artemidorus) ஆண்டிபிலி போர்டுஸ் (Antiphili Portus) என்பர்.

(2) ஆப்ஸியன் கற்கள் (Opsian) கடுங் கருநிறமும், பின்புறம் தெரியக் கூடியனவும், நிழலாடக் கூடியனவுமானவை யென்றும் ஆபரணங்களாகவும், பிரதிமைகளாகவும், பிரார்த்தனைப் பண்டங்களாகவும் உபயோகப்படுகின்றன வென்றும் பிளினி கூறுகிறார். டாமிஷியன் சக்கரவர்த்தி தாம் உட்காருமிடத்தில் பின்னிருந்து வருபவர்களைத் தெரிந்து கொள்வதற்காக ஆப்ஸியன் கற்களால் ஒரு முகப்புக் கட்டியிருந்தார். இப்பொழுது 'ஆப்ஸியன் கற்கள்' என்பதும் இதுவும் ஒன்றாக இருக்கலாமென்று தோற்றுகிறது. 'அபிஸினியாவில் யாத்திரை' என்ற நூலில் ஹென்றி ஸால்ட் என்பவர் தாம் ஆப்ஸியன் துறைக்கு சென்றதாகவும் அங்கே காணப்படும் மலையின் அடிவாரத்தில் பல கற்களைக் கண்டதாகவும் அவை கண்ணாடியைப்போல் மிக்க பளபளப்புடையனவாக இருந்ததாகவும் கூறுகின்றார். உள்நாட்டிற் சென்றால் இன்னும் பெரிய கற்களைக் காணல் கூடுமென்று அவ்விடத்தில் வாழும் ஜனங்கள் கூறினதாகவும் எழுதுகின்றார்.

உலோபி, ஆசை யதிகமுடையவன்; எனினும் நீதி நெறி வழுவாதவனும் யவனக்கலையில் வல்லுநனு மாவான்.

6. இவ்விடங்களில் எகிப்திய நாட்டில் நெய்த முரட்டுத் துணிகள்[1] பெர்பர் நாட்டுமக்கள் உபயோகத்துக்காக இறக்குமதியாகின்றன. ஆர்சிநாய்[2] என்ற இடத்திலிருந்து விலையுள்ள உடைகள், சாயந்தோய்த்த கீழ்த்தரமான அங்கி, இரண்டு பக்கமும் அருகுகளமைந்த முட்டாக்கு, அழுத்தமான கண்ணாடியாற் செய்த பல படங்கள், வர்ணக் கண்ணாடிகள் முதலாயின டயஸ்போலிஸி லிருந்து[3] வருகின்றன. ஆபரணமாகவும் நாணயங்களுக்குத் துண்டுகளாக வெட்டி உபயோகிக்கவும், பித்தளைப்பாத்திரங்களுக்கும் மாதர் கைவளை கால்வளைகளுக்கும் உதவவும், நயமான செப்புத் தகடுகள்,[4] யானைகளைக் கொல்லவும் போரிட

---

6. (1) முரட்டுத்துணி :—புளிச்சை நாரினுற் செய்யப்படும் துணிகள்.

(2) Arsinoe. சுவேஸ் பட்டணத்திற்கு அருகிலுள்ள ஓர் ஊர். இவ்வூர் ஒரு காலத்தில் வாணிபத்திற் சிறந்திருந்தது; பிற்காலத்தில் ஆடைகளுக்குப் பேர் போனதாயிற்று.

(3) Diospolis. இப் பெயர்க்குத் தேவநகர் என்று பொருள். தீபிஸ் (Thebes) என்ற நகராக விருத்தல்கூடு மென்றெண்ணுகின்றனர். நீல நதி தீராரம்பத்தில் ஒரு டயஸ்போலிஸ் உண்டென்று ஸ்டிராபோ கூறுகின்றார். ஆனல் அது அவ்வளவு பிரசித்த முடையதன்று. எகிப்தில் செய்யப்பட்ட கண்ணாடிப் பண்டங்கள் வந்து பெரனிஸுக்குப் போவதற்கு இதுவே ஏற்ற பட்டணம்.

(4) செப்புத்தகடு :—இதனை மூல ஏடு, தேன்செம்பு என்று கூறுகிறது. பலர் பலவிதம் பொருள் கொண்டுள்ளார். நம் நாட்டில் தீட்டிய்டிக்க உதவும் இரும்பைத் தேனிரும்பு என்று சொல்லுகின்றோம். அஃதே போன்று வேலைக்கு உதவும் நயத்த செம்பைத் தேன்செம்பு என்றனர் போலும்.

வும் உதவும்படி வேல்களைச் செய்ய இரும்பு[5] முதலியன வருகின்றன. இவைகளை யன்றிச் சிறு கைக்கோடரி வாய்ச்சி, கத்தி முதலியனவும் வருகின்றன. குடிக்க உதவும் வட்டமான பெரிய குவளைகளும், சந்தை வியாபாரத்திற்குச் சில்லறை நாணயங்களும், லவோடிசியா இத்தலி யிவற்றி லிருந்து சிறிதளவு சாரயமும், மட்டாக லலிவை யெண்ணெ யும், அரசர்க்காக அந்நாட்டுத் தாம்பளங்களைப்போலப் பொன் வெள்ளித் தாம்பளங்களும், விலை அதிகமில்லாத போருடைகளும், மெல்லிய தோலுடைகளும்[6] வருகின்றன. கடலுக்கு எதிர்ப் புறத்திலுள்ள ஆரியகத்திலிருந்து[7] இந்திய இரும்பு, எஃகு[8] இந்தியப் பருத்தியாடை, மனேக்கியை,

(5) இரும்பு—இஃது உலகத்தில் எப்பாகத்திலும் அகப்படு வதாயினும் சேரநாட்டிலிருந்து வருவதே மேலானதெனப் பிளினி நினைக்கின்றார். சேர்வராயன் மலையடியி லகப்படும் இரும்பை மேலானதாக இன்றும் அறிஞர் கருதுவர்.

(6) தோலுடைகள்:—முற்காலத்தில் உரோமங்களோடு கூடிய தோலுடைகள் இருந்தன. அவைகளின் மேலுள்ள மயிர்கள் நீக்கப்படாமலே உபயோகப்பட்டுவந்தன. புறநானூற்றில் மயிர்க்கண் முரசங்கள் வெற்றி வேல் வேந்தரிடம் இருந்தனவாகப் படிக்கின் றோம். சிலப்பதிகாரம் எலி மயிர் உடையுண்டென்று கூறுகின்றது.

(7) ஆரியகம்:—தமிழகத்தின் வடக்கிலுள்ள நாடுகள்; விந்திய மலைப் பக்கமுள்ள நாடுகள். தற்காலக் கச், காம்பே, கத்திவார் நாடு கள்; மகாராட்டிரப் பிரதேசமென்பர் சிவராஜ பிள்ளை.

(8) இந்திய இரும்பும் எஃகும்:—இவைகள் இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகி வந்தன. சேர தேசத்து எஃகு நயமானதும் உறுதி யுள்ளதுமெனப் பிளினி கூறியிருக்கிறதாகக் காட்டினோம். மார்க்கஸ் அரிலியஸ், கம்மோடஸ் என்னும் உரோமர்கள் அரசாண்ட காலத் தில் இவைகட்கு உரோமில் இறக்குமதி வரி உண்டு. பைபிளில் எஸீ கல் XXVIII—19-ல் கூறப்பட்டதும் எஃகே. எதிரிசி என்பார் 'இந்துக்கள் இரும்பு வேலையில் திறமையுள்ளவர்கள். உலகத்தில்

சகமதோகினி[9] யென்னுஞ் சகலாத்து, அரைக்கச்சு, தோலாடை, தோம்பு, கலிங்கம், செப்பஞ்சு[10] முதலாயின வருகின்றன. இந்நாடுகளிலிருந்து தந்தம் ஆமையோடு[11] கண்டாமிருகத்தின் கொம்பு இவைகள் ஏற்றுமதியாகின்றன. எகிப்திலிருந்து வரும் பண்டங்கள் திபியென்ற மார்கழி தைமாத முதல் தோத் என்ற ஆவணிமாதம்வரை வருகின்றன ஆவணிமாதத்தில் வணிகர் வழக்கமாகத் தங்கள் தேசம் செல்லுகின்றனர்.

அதிக உறுதியுள்ளவை அவர்களால் செய்யப்படுகின்றன. இந்திய எஃகினுல் வடிக்கப்பட்ட கூரின் முன் உலகத்தின் மற்றப் பாகங்களிலிருந்து வருவன எதிர் நில்லா' என்றெழுதுகிறார்.

(9) மனேக்கியை (Monache) என்பதற்கு 'மிக நேர்த்தியானது' என்றும், சகமதோகினி என்பதற்கு 'அடைக்க உதவும் பண்டம்' என்றும் பொருளெனக்கூறுவர் வின்சென்டு. பின்னது இலவம் பஞ்சாகவிருக்கலாமென்பதும் அவர் அபிப்பிராயம். இவை வியாபாரப் பண்டப்பெயர் (Trade name) என்பது ஷாப் என்பவர் அபிப்பிராயம். 'சகலாத்து 8 முழ நீளம் இரண்டு முழ அகலமுள்ளது. இரண்டாக இணைக்கப்பட்டிருக்கும். சோமாலியர் இதனை இடதுதோளிலிட்டு வலது தோளை வெளியில் விட்டு உடலை மூடிக் கொள்வர். மழைக்காலத்தில் உடல் முழுவதும் மூடிக் கொள்வர். பெண்டுகள் தோட்புறம் மூடிபோல் உடுத்துவர். இடுப்பைச் சுற்றிக் கட்டுவர். இடுப்பின் கீழ் மூன்றுனை தொங்கும்; அதனைக் கொண்டு தலையை மூடுவர்' என்று பர்ட்டன் எழுதுகின்றார்.

(10) செம்பஞ்சு :—பெண்டிர் முற்காலத்தில் செம்பஞ்சுக் குழம்பு தீட்டிக் கொள்வது யாவருமறிந்ததொரு செய்தியாம். இந்த வழக்கம் இந்நாட்டிலிருந்து மேல்நாட்டுக்குச் செல்ல இப்பொருளும் உடன் சென்றது. இப்பொருளை இன்னதென அறியாத மேல் நாட்டு மொழிபெயர்ப்பாளர் அரக்கு என்று பொருள் படும் 'Laç' என்ற சொல்லால் மொழிபெயர்த்தனர்.

(11) ஆமையோடுகளில் உரோம நாட்டுப் பெண்டிர் பெட்டி முதலியவைகள் செய்து உபயோகிப்பதும் அணிகலன்கள் செய்து அணிவதும் மரபு.

7. அராபிக்குடா இந்த இடத்திலிருந்து கீழ்புறமாகச் சென்று அவலிடஸ்குடா ஓரமாகக் குறுகுகிறது. அதே கரையோரமாகக் கிழக்கே 4000 ஸ்டேடியா சென்றால் பல சேய்மைத்துறைகள் (*Far-Side ports*) இருக்கின்றன. அவை பெர்பர் நாட்டு அங்காடிப் பட்டினங்கள்; நல்ல துறைமுகங்களல்லவாயினும் கப்பல் நிற்கவுதவுமிடங்களாகும். முன்னே யிருப்பது அவலிடஸ்[1] (*Avalites*); இந்த ஊருக்கு அரேபியாவிலிருந்து எளிதிற் பிரயாணஞ் செய்யலாம். இங்கே அவலிடஸ் என்ற பேருடைய ஒரு சிறிய சந்தையூர் உண்டு; இவ்வூருக்குத் தோணி, தெப்பங்களி லேறிச் செல்ல வேண்டும். பலவிதமான கண்ணாடிகள், டயஸ்போலிஸிலிருந்து (*Diospolis*) புளிப்புத் திராட்சை ரஸம்,[2] பெர்பர்களுக்காகப் பலவித பருத்தியுடை, கோதுமை,[3] சாராயம், சிறிதளவு தகரம்[4] இவை இறக்குமதியாகின்றன. இங்கிருந்து வாசனைத்திரவி

---

7. (1) இதுபோது ஸெயிலா (Zeila) என்று பேர் பெறும். 11°20′ N., 43° 28′ E இது பாபல் மண்டப் ஜலசந்தியிலிருந்து 79 மைல் தூரத்திலிருக்கின்றது. பக்கத்திலுள்ள ஒரு கிராமத்துக்கு அபலிட் (Abalit) என்றே பேர்.

(2) மூல ஏட்டில் ஓம்பாகியோன் (Omphakion) என்று எழுதப்பட்டிருக்கிறது. 'ஓம்பாகியோன்' என்பது அமனியன் திராட்சை, ஒலிவைகளிலிருந்து வடிக்கப்படும் ஓர் எண்ணெய் என்றும், இது மண்சாடிகளில் சேமிக்கப்பட்டுப் பின்னர்ச் செப்புப் பானைகளில் வைக்கப்படுகிறது என்றும், பார்வைக்குச் சிவப்பாயும் உருசியற்ற உறைப்புடையதாயு மிருக்குமென்று பிளினி கூறுகிறார். இது வாய்ப்புண், வயிறு கடுப்பு, இரத்தக் கக்கல் முதலான நோய்கட்குத் தகுந்த மருந்து. பற்களை வெண்மையாக்க கூடியது.

(3) கோதுமை முதலில்காட்டுத் தானியமாக விருந்த ஒரு பழைய தானியம். கி. மு. 2700ல் சீனர் பயிரிட்டனர். சுவிட்ஸர்

யங்கள், சிறிதளவு யானைத் தந்தம், ஆமையோடு, உயர்ந்த குங்கிலியம், சாம்பிராணி இவை ஏற்றுமதியாகின்றன; இவற்றைப் பெர்பர் நாட்டினரே சிலவேளைகளில் ஓசிலிஸ் (*Ocelis*) மூசா (*Muza*) துறைமுகங்களுக்குத் தெப்பங்களிற் கொண்டு செல்கின்றனர். இந்த இடத்தில் வசிக்கும் பெர்பர்கள் கட்டுக் கடங்கா முருடர்களாவர்.

8. அவலிடஸை யடுத்து எண்ணூறு ஸ்டேடியா பயணத்தில் அவ்வூரைவிட மேலானதும் மலேவா[1] என்ற பேருடையதுமான ஓர் அங்காடிப்பட்டின மிருக்கிறது. கப்பல் கடலிற்றான் தங்கவேண்டு மாயினும் கிழக்கில் நின்றோடும் ஒரு சிறுமுனை காப்பாக விருக்கின்றது.[2] இந்நாட்டினர் சாதுவான தன்மையினர். முற்கூறிய பண்டங்களோடு அர்சிநாயிலிருந்து தைத்ததும் சாயம் போட்டதுமான பலவகைத் துணிகளும், அங்கிகளும், மற்றும் குவளைகளும், சிறிது செப்புத் தகடுகளும், இரும்பும், பொன்

லாந்தில் கி.மு. 1500ல் பயிரிடப்பட்டது. எகிப்திய கோபுரங்கள் ஒன்றில் காணப்பட்ட கோதுமையின் வயது கி. மு. 3350 எனக் கணிக்கப்படுகின்றது.

(4) தகரம் இது இங்கிலாந்து தேசத்திலிருந்து வந்ததென்பர் சிலர். வடமொழி கஸ்திரா என்ற சொல்லுக்கும் கிரேக்க கஸ்வித ரோஸ் என்ற சொல்லுக்குமுள்ள ஒற்றுமையைக்கொண்டு லாஸன், ஆபர்ட் முதலாயினோர் இந்தியாவைச் சார்ந்த மலாக்காவிலிருந்து வந்ததென்பர்.

8. (1) மலேவா (Malao) என்பது இதுபொழுது (Berbera) என்று வழங்குகிறது. 10°25′. N., 45°5′ E. இது பிரிட்டிஷ் சோமாலிநாட்டுத் தலைமைப் பட்டினம்.

(2) சிறுமுனை: ஒரு பெரிய உப்பங்கழியை யுடையது. அது அதிக ஆழமில்லாததால் கப்பல் ஆழமான விடத்தில் நிற்க வேண்டி யிருக்கிறது.

வெள்ளி நாணயங்களும் வருகின்றன. குங்கிலியம், உள்நாட்டுச் சாம்பிராணி,[3] கெட்டி இலவங்கம், டுவாகா,[4] இந்திய குங்கிலியத் தைலம்,[5] (*Indian Copal*) மாசிர்,[6] அடிமைகள் இவைகள் ஏற்றுமதியாகின்றன.

9. இங்கிருந்து இரண்டு மூன்று நாட்பயணம் சென்றால் மூண்டுஸ்[1] அங்காடிப்பட்டின மிருக்கிறது. ஊருக்கு

---

(3) சாம்பிராணி : இந்தப் பண்டம்தான் உண்மையான சரக்கு எனத் தெரிகிறது. அரேபியாவிலுண்டாகும் சாம்பிராணி அவ்வளவு விசேஷமானதன்றெனக் கருதப்படுகிறது.

(4) Duaca. ஒருவகைச் சாம்பிராணி. இப்பொழுதும் டுகோ (Duka) என்ற வணிகப் பெயரோடு ஏடன் நகரத்தில் ஒரு வகைச் சாம்பிராணி விற்பதாகக் கிளாஸர் கூறுகின்றார். சாம்பிராணிமரங்கள் மலையில் 4000, 6000 அடி உயரத்தில் ஏராளமாக வளர்கின்றன என்று பர்ட்டன் கூறுகின்றார்.

(5) மூல ஏடு கங்கமோன் (Kankamon) என்று கூறுகிறது. இலவங்கம் உண்டாகிற தேசத்திலிருந்து வருவதாகப் பிளினி கருதுகிறார். டயோஸ்கோரிடஸ் குங்குலியம் போன்ற மரங்களிலிருந்து வடியும் பிசின் என்று எழுதுகிறார். தளகர்த்தர் யூல் இது இந்தியாவிலுள்ள வெள்ளைக் குங்கிலிய மரத்துக் 'கோபால்' என்று எழுதுகிறார். இது வார்னிஷிக்கு உபயோகப் படுகிறது.

(6) மாசிர் (Macir) என்பது ஒருவகை வாசனைப்பட்டையென்று டயோஸ்கோரிடஸ் கூறுகின்றார். இந்தியாவினின்று கொண்டுவரப்பட்ட ஒரு சிவப்பு நிறமுள்ள பட்டை யென்பர் பிளினி. இந்தப் பட்டையைப் பொடிந்து தேனோடு கலந்து கொடுக்க வயிற்றுக் கடுப்பு நிற்குமாம். நம் நாட்டில் இதனைத் திரவியப்பட்டை, திருமஞ்சனப்பட்டை யென்பர்.

9. (1) முண்டுஸ் (Mundus) என்பது 10°52′N., 46°50′E. லுள்ள பந்தர் ஹேய்ஸ் (Bander Hais) என்ற ஊராக இருத்தல் கூடும்.

முன் ஒரு தீவு இருப்பதால் அதன் பின்னே கப்பல்கள் தங்கத்தகுந்த வசதி யேற்பட்டிருக்கின்றது. முற்கூறிய பண்டங்களே இங்கும் இறக்குமதியாகின்றன. முன்கண்ட ஏற்றுமதிச் சரக்குகளோடு மொக்ரத்து[2] என்ற வாசனைப் பண்டமும் ஏற்றுமதியாகின்றது. இங்கு வாழும் வணிகர் சச்சரவிடும் குணமுடையவர்.

10. முண்டுஸை விட்டு இரண்டு மூன்று நாட் பயணம் கிழக்கே சென்றால் மோசிலம்[1] என்ற பட்டின மிருக்கிறது. இதனில் கடற்கரை (*Beach*) உண்டு; ஆனாலும் கப்பல் தங்க வசதியில்லை. முற்கூறியவைகளோடு வெள்ளித் தட்டுகளும், சிறிது இரும்பும், கண்ணாடியும் இறக்குமதியாகின்றன. இங்கிருந்து இலவங்கம்,[2] வாச

---

(2) Mocrotu. ஒருவகை உயர்ந்த சாம்பிராணி. அரபு பாஷையில் ம்கேரோத் Mghairot என்றும், மஹ்ரி Mahri பாஷை யில் ம்கர் mghar என்றும் பெயர். சோமாலி பாஷையில் மோகர் mokhar என்று பெயர். இது கிரேக்க பாஷையில் வந்தபோது மொக்ரத்து என்றாயிற்று.

10. (1) Mosyllum. இது 11°28′N., 49°39′Eல் உள்ள ராஸ் ஹன்டரா (Ras Hantara) என்ற ஊரென்பது பலர் கொள்கை. கிளாஸர் ராஸ் கம்ஸிர் (Ras khamzir) என்ற ஊராக விருக்கலாமென்கின்றனர். அட்லாண்டிக் மகா சமுத்திரம் இங் கிருந்து ஆரம்பமாகிறதென்று பிளினி எழுதியது கவனிக்கத்தக் கது.

(2) இலவங்கம்: மூல ஏட்டில் காஸியா (Kasia) என்றிருக் கிறது. இது எபிரேய பாஷையில் கேஸியா (Kezia) என்று பேர் பெறும். உரோமர் காலத்தில் இச்சொல் நீட்டுப்போக்கில் உடைத்த மரத்தைக் குறிக்கும். பூங்கொழுந்தையும் இளம்பட்டைகளையும் சின்னமன் என்பர். எபிரேயம் கெனெஹ் (Kheneh)-குழாய் (pipe). சின்னமன், காஸியா (Cassia) என்ற இரு சொற்களும்

னைப் பிசினிகள், வாசனைத் திரவியங்கள், சிறிது ஆமையோடு, மொகரத்து, உள்நாட்டுச் சாம்பிராணி, மருப்பு, குக்கிலியம் இவைகள் வெளியேறுகின்றன.

11. மோஸில்லத்திற்குக் கிழக்கே இரண்டு நாள் பயணம் போனால் சிறுநீலநதியை[1] யடைவோம்; நல்ல தண்ணீர் ஊற்றும், தோப்பும் கரிமுனையு[2] மிருக்கின்றன. இங்கிருந்து கரை வளைந்து குடாவாகி விடுகிறது. கரியாறு என்ற ஓராறு வந்து கடலில் கலக்கின்றது. அங்கே அகன்னி[3] (*Acannæ*) என்ற தோப்பும் காணப்படும்; நல்ல முதற்றரமான சாம்பிராணி ஏராளமாகக் கிடைக்கின்றது.

இந்தியா, திபெத்து, பர்மா, சீனம் இந்த நாடுகளிலுள்ள லாரல் வகை மரங்களின் பூங்கொழுந்து, பட்டை, மரம் இவற்றைக் குறிக்கும். இவற்றை ஐரோப்பியர் பல பெயரிட்டு வழங்கினர். எகிப்தியருக்கு கி. மு. 1.500லேயே இலவங்கம் தெரிந்ததொரு பண்டமாகும். கிரேக்க உரோமர்கள் இவற்றைத் தூபமாகவும், வாசனைப் பண்டமாகவும் உபயோகித்துவந்தனர். அவர்கட்கு இப்பண்டம் எங்கிருந்து வந்ததென்று தெரியாது. மலையாளம், இலங்கைத் தீவுகளிலிருந்து ஏற்றுமதியானவை கருவா மரத்தின் பட்டையும் கொழுந்துமாகும். இவற்றை வாயிலிட்டு மெல்லும்போது இவை மதுரமும், உறைப்பும், நறுமணமும் உடையனவாயிருக்கும். இன்றும் தென்னாட்டில் கருவாப்பட்டையான இலவங்கப்பட்டையை மாமிசத்தோடு சேர்த்து கலந்துண்கின்றனர். உரோம கிரேக்கர்களும் அந்நாளில் இப் பண்டங்களை அதிக விலை கொடுத்து வாங்கி உபயோகித்து வந்தனர்.

11. (1) டோக்வினா (Tokwina) நதி யென்பர் மூல்லர். மூல ஏட்டில் நீலபோதமியன் (Neilopotamion) என்றிருக்கிறது.

(2) கரிமுனை, Cape Elephant, Ras-el-Fil என்பது. 12°0′N, 50°32′E. குவார்டாபியூ (Guardafui) முனைக்கு 40 மைல் மேற்கிலிருக்கிறது. முனை செல்வது யானையைப்போல் இருப்பதால் இப்பெயரிட்டனர் போலும்.

(3) அகன்னி யென்பது இப்பொழுது பந்தர் உலூலா (Bander Ululah) வாகக் கருதப்படுகிறது. இந்தத் துறைமுகத்தில் கி. பி.

12. இந்தத் துறைமுகத்துக்கப்பால் கரை தெற்கு முகமாகத் திரும்புகிறது. அவ்விடத்தில் பெர்பர் நாட்டின் எல்லைக் கோடியான முனையொன்று காணப்படும்; அதற்கு நறுமண முனை[1] (*Cape of Spices*) யென்று பெயர். அருகே அங்காடிப்பட்டின[2] மொனறும் இருக்கிறது. இந்த இடம் வடக்கு நோக்கி யிருப்பதால் கப்பல் நங்கூரம் பாய்ச்சிநிற்பது சில வேளைகளில் கஷ்டமாகிறது. புயல் இங்கே அதிகமாக வீசும்; அதனை முன்னறிவிக்கும் குறியாகக் கடல் கொந்தளித்து நிறம் மாறும். அக்காலங்களில் கப்பல்கள் டபி[3] (*Tabae*) என்ற முனைக்குச் சென்று காப்பாற்றிக் கொள்ளும். இங்கும் முற்கூறிய பண்டங்களே இறக்குமதியாகின்றன. இங்கிருந்து சாம்பிராணியும், இலவங்கமும் அதன் வகைகளான கிஸிர் (*Gizir*) அஸிபா (*Asypha*), அரபோ (*Arebo*), மக்லா (*Mugla*), மோடோ (*Moto*) என்பவைகளும் ஏற்றுமதியாகின்றன.

1611-ல் கபித்தான் சரிஸ் (Captain Saris) சென்றனரென்றும், அவ்விடம் கடலில் கலக்கும் ஆற்று முகத்துவாரத்தில் ஒரேசமயத்தில் மூன்று கப்பல்கள் நிற்க இடமிருக்கிறதென்றும், அங்கே பல வகை நறுந்தூபப் பண்டங்கள் இந்தியரால் வாங்கப்படுகின்றன வென்றும் எழுதியிருப்பதாக மக்கிரிண்டில் கூறுகிறார்.

12. (1) குவார்டாபியூ என்ற ராஸ் அஸிர் (Ras Asir) 11°50′ N., 51°16′ E. இதனை ஸ்டிராபோ தென்கொம்பு (Southern-Horn) என்பர்.

(2) கிளாஸர் இதனை ஒலக் (Olok) என்ற ஊராகக் கருதுகிறார். இங்கே ஜவிஸ் நீலுஸ் என்ற நதிகள் ஓடுவதாயும், சாம்பிராணியும், குங்கிலியமும் உண்டாவதாயும், அதனோடு இலவங்கமும் கிடைப்பதாயும் ஸ்டிராபோ எழுதியுள்ளார்.

(3) இது முனைக்கு அருகிலுள்ளது.

13. டபீக்குக் கீழ் அறுநூறு ஸ்டேடியா கழித்து பனோ[1] (*Pano*) என்ற ஊர் இருக்கிறது. அதற்குக் கீழ் கூராகச் செல்லும் ஒரு முனைவோரமாய் 400 ஸ்டேடியா சென்றால் ஓபோன்[2] (*Opone*) என்ற அங்காடிப் பட்டின மிருக்கிறது. இவ்விடங்களிலும் முற்கூறிய பண்டங்களை ஏற்றுமதியாகின்றன. ஓபோனில், அரபோ, மோடோ வகை இலவங்கம் ஏராளமாக உண்டாகின்றன. இங்கிருந்து எகிப்துக்கு நல்ல அடிமைகளும் கொண்டுபோகப் படுகின்றனர். மற்ற விடங்களிற் கிடைப்பதைவிட மேம்பட்டதான ஆமையோடும் கிடைக்கின்றது.

14. செங்கடலிலுள்ள இந்த வியாபாரஸ்தலங்களுக்கெல்லாம் எகிப்திலிருந்து எபிபி என்ற ஜூலை மாதத்தில் பயணம் போகின்றனர். கடலுக்கு அப்புறமுள்ள ஆரியகம்[1] பாரிகஸா துறைமுகங்களிலிருந்து வழக்கமாகக் கப்பல்கள் வருகின்றன. அங்கிருந்துவரும் பண்டங்கள் கோதுமை அரிசி, நெய், நல்லெண்ணெய், பருத்தியாடை, உடை, சர்க்கரைச் செடி[2] யிலிருந்து தேன்பாகு[3] முதலியனவாம்.

---

13. (1) பனோ 11°12′ N., 51°7′ E.ல் இருக்கிற ராஸ் பின்னு (Ras Binna) வாக இருக்கலாம்.

(2) ஓபோன் என்பது இப்பொழுது ராஸ் ஹாபூன் (Ras Hafun) என்று வழங்குகிறது.

14. (1) ஆரியகம். Ariaca. நம் நாட்டிற்கும் ஆபிரிக்கா தேசத்திற்கும் வெகு காலமாக வியாபாரம் நடந்து வருவது உலகப் பிரசித்தம். நீலநதியும் அங்குள்ள பெரிய நீர்நிலைகளான விக்டோரியா நியான்சா முதலான இடங்களும் இந்தியப் பூர்விகர்களுக்குத் தெரிந்ததே.

(2) கரும்பை அவர்கள் அறியாததால் சர்க்கரைச்செடி யென்பர்.

(3) முற்காலத்தில் கரும்பஞ்சாற்றைக் காய்ச்சித் தேன்பாகாக வைத்துக் கொள்வது வழக்கம். இப்பண்டம் இந்நாட்டில் ஏராள

சிலர்[4] இக்காடுகளின் வியாபாரத்திற்காக வருகின்றனர். மற்றுஞ் சிலர் பண்டமாற்றின் பொருட்டு வருகின்றனர். இந்தப் பட்டினங்களெல்லாம் ஓர் அரசனுக்குட்பட்டவை யல்லவாயினும் தனித்தனியான தலைவர்களுக்குட்பட்டவை.

மாக இருந்ததே யொழிய ஐரோப்பிய சந்தைகளில் தெரியாதது. பிளைனியே இது மருந்துப் பண்டமென்பர். அவர் காலத்திற்குப் பிறகுதான் ஐரோப்பிய சந்தைகளில் நின்பண்டமாயிற்று.

(4) இந்நூலின் காலத்திற்கு—1800 ஆண்டுகட்குப் பின்னர், கி. பி. 1848-ல் சென்ற லெப்டினன்ட் குருட்டன்டென் (Cruttenden) எழுதுவதாவது:—"ஏப்ரில் முதல் அக்டோபர் வரை இந்த இடம் பாழாகக் கிடக்கிறது. வியாபார காலம் தொடங்கியதும் நாட்டார் உள்நாட்டிலிருந்து கடற்கரை யோரமாகச் செல்லுகின்றனர். ஏமனிலிருந்து சிறு படகுகள் பிறர் வருவதன்முன் வியாபாரஞ் செய்ய விரைகின்றன. இரண்டு வாரத்திற்குப் பிறகு மூன்டட் கர், சென் வல்லையா, பிரேவாரா முதலான இடங்களிலிருந்து வியாபாரிகள் சரக்குகளை யேற்றிக் கொண்டு விரைந்தோடுகின்றனர். கடைசியாக, போர்பந்தர், மாண்டவி, பம்பாய் நாடுகளிலிருந்து கொழுத்த பணக்காரரான பனியர்கள் தங்களுடைய கொடியா (kotias) என்ற மரக்கலங்களில் சரக்கேற்றி வந்து விற்று விட்டு, விற்றுப்போகக் காலியான செம் ஜாடிகளோடு திரும்புகின்றனர். இவ்வகை வியாபாரத்தில் தங்களுடைய சாமர்த்தியத்தால் முன்னணியில் நிற்கின்றனர்.

'சந்தை முழுமூரமாக விருக்குங்கால் பல பாஷைகள் காதில் விழும். அங்கே தலைவர் ஒருவருமில்லாமையால் அந்நாட்டார் தம் பலவகைகளைக் கடற்கரை சென்று போரிட்டுத் தெரிந்து கொள்வர். சோமாலியும் சவ்வைகும் பல்லேவாரா, பந்தாது முதலிய பட்டணங்களிலிருந்து வரும் வியாபாரிகளோடு போஞ்செய்வர். காட்டாறுள்ள குடாபர்சி (Gudabarsi) தலைவில் விசித்திரமான பாவையெளிந்து பெருப்புக்கோழி இறகுகளையும், சாம்பிராணி, தூபக்கலங்களையும் பனிய வியாபாரிக்கு விற்பான். பனிய வியாபாரி தன் பண்டங்களைச் சிறகச் சிறைத்தான் வெளியில் காட்டுவான். மார்க்க முடிவில் கப்பல் இரண்டு மூன்று சேர்ந்து

15. ஓபோனுக்கு அப்புறம் கடல் தென்புறமாக வளைகிறது; அங்கே முதலில் அஸனியா மணற்குன்றுகள் இருக்கின்றன; இந்தக் கடற்கரைப்பக்கம் கப்பல் தங்கக் கூடிய கப்பற்சாலைகள் இராவிடினும் கடல் ஆழமாக இருப்பதால் கப்பல் தங்கக்கூடும். இவற்றிற்குத் தென்மேற்கு முகமாக ஆறுநாள் பயணம் செல்லவேண்டும். பிறகு சிறிதும் பெரிதுமான கடற்கரைகள் ஓரமாக ஆறுநாள் பாய் விரித்தோடினால் முதலில் அஸனியா துறை முகங்கள் காணப்படும்; அவற்றுள் ஸாரப்யோன்[1] (*Sarapeon*) முதலாவது; அடுத்தது நிக்கன்[2] (*Nicon*); அதன் பின்னர் பல நதிசங்கமங்களும் தங்குமிடங்களுமாக ஏழிடங்கள் காணப்படுகின்றன; பின்னர் பிறலேயி[3] (*Pyralaoe*) என்ற தீவுகள் தென்படும். இதற்கப்பால் தென்மேற்குத் தெற்கு முகமாக ஒரு பகலும் இரவும் ஓடினால் மெனுதியாஸ்[4] (*Menutheas*) என்ற தீவு காணப்படும்; இது கரைக்கு 300 ஸ்டேடியா தூரத்திலிருக்

சேர்ந்து புறப்பட்டுவிடும். ஊரும் காலியாகிவிடும். இருபதினாயிரம் மக்கள் கூடியிருந்த ஓர் இடம் ஒருவன் கூட இல்லாமல் வெற்றிடமாகக் காணப்படுவது அதிசயமாக விருக்கும்'.

15. (1) ஸாரபியோன் என்பது இதுபொழுது மொக்திஷு (Mog-dishu) என்று வழங்குகிறது. 2°5′N, 45°25′E.

(2) நிக்கன் என்பது பராவா (Barawa) வாக விருக்கலாம். 11°0′N., 44°5′E.

(3) இவை பட்டா, மாண்டா, லமூ என்ற தீவுகள்.

(4) தெற்கே 8 டிகிரியிலுள்ள மொன்பியா (Monfiyeh) என்ற தீவாக இருக்கலாம். ஈண்டு குறிக்கப்பட்ட விஷயங்களை இந்நூலாசிரியர் நேரிற் காணாது பிறர் சொல்லக் கேட்டிருப்பர் என்று தோற்றுகிறது என்பர் ஷாப்

கிறது; இங்கே மரம் அடர்ந்திருக்கின்றது; பல ஆறுகளும் பறவைகளும், மலையாமைகளும் இருக்கின்றன; முதலைகளைத் தவிர்த்து வேறு காடுவாழ் விலங்குகளில்லை. முதலைகளும் மனிதரைத் துன்புறுத்துவதில்லை. இந்தத் தீவில் சந்துகளுக்கு நார் அடைக்கப்பட்ட தோணிகளும் ஒற்றை மரத்தில் தோண்டப்பட்ட சிறுபடகுகளும் உண்டு; அவற்றி னுதவியால் நாட்டினர் மீனும் ஆமையும் பிடிக்கின்றனர். இந்த அதிசயமான வகையில் கால்வாயில் கற்களுக் கிடையில் குச்சிகளால் கட்டிய கூடையொன்றை வைத்து இவற்றைப் பிடிக்கின்றனர்.[5]

16. இரண்டு நாட் பயணத்துக்கப்பால் அஸனியா கண்டத்தின் கடைசித் துறைமுகமான ரப்தா[1] (*Rhapta*) இருக்கிறது. இந்தப் பெயர் அங்குள்ள படகுகளால் ஏற்பட்டது.[2] அந்த இடத்தில் 'யானை மருப்பும் ஆமையோடும் அதிகம். இந்தக் கரையோரமாக, கடற்கொள்ளைக்காரர் மிகுதி. அவர்கள் வலுத்த சரீரமுடையவர்கள். ஒவ்வொரு வகுப்புக்கும் தலைவர்களுண்டு. ஒரு பழைய வழக்கத்தை யொட்டி பெரிடிக் தலைவர்[3] அவர்

---

(5) தமிழ் நாட்டில் மீன் பிடிப்பவர்கள் சாருகுத்துதல், பறி வைத்தல் போன்று அவர்களும் மீன் பிடிக்கின்றனர்.

16. (1) இந்த ரப்தா என்ற ஊர் இதுதானென்று திட்டமாகக் கூறுவதற்கில்லை. அது ராப்தாவாக இருந்தாலுமிருக்கலாம். ராப்தா என்ற சொல்லுக்கு வழக்கமாகச் செல்லும் ஊர் என்று பொருளாயிருக்கலாம்.

(2) கிரேக்கர் ரப்தா என்ற பெயர் அங்கு வழங்கிய இணைக்கப் பட்ட படகுகளால் (Sewed boats) வந்த பெயர் என்பர்.

(3) கிரேக்க உரோம ராஜ்யம் தலையோங்கியிருந்தபோது அரேபியருக்குப் போக்கிடமின்மையால் ஆப்பிரிக்கா நாட்டில் ஆதிக்கம் பெற்றிருந்தனர். யவனர் ஆதிக்கம் குறையவே முகமதியர் ஐரோப்பாவில் மேலோங்கினரென்பது சரித்திரம்.

களை ஆளுகின்றனர். இந்த மெபரிடிக் தலைவர்கள் அரேபியாவிலே தலைமை வகிக்கும் நாட்டினர். இப்பொழுது மூசா நாட்டு ஜனங்கள் அந்த மெபரிடிக் தலைவன் மூலம் ஆளுகின்றனர்; அவர்கள் பல கப்பல்களை வியாபாரத்திற்கு அனுப்புகின்றனர்; கப்பல்கள் அரபியர் வசம் அனுப்பப்படுகின்றன; அரபியர் நாட்டு பாஷையை யறிந்திருப்பது மன்றி அந்நாட்டினரோடு சம்பந்தமும் செய்து கொண்டு வாழ்கின்றனர்.

17. இந்தப் பட்டினங்களிலே வாணிபத்திற்கென்றே மூசா (*Muza*) விற் செய்யப்பட்ட ஏறியீட்டிகளும் கைக்கோடரிகளும், ஈட்டிகளும், ஊசிகளும், பலவித கண்ணாடிகளும், சில விடங்களில் சிறிது சாராயமும், காட்டு முரண்டிகள் நட்பைப் பெறுவதற்காகக் கொடுக்கக் கொஞ்சம் கோதுமையும் இறக்குமதியாகின்றன. ஏராளமாக யானை மருப்பும் காண்டாமிருகத்தின் கொம்பும், ஆமையோடும் சிறிது தேங்கா யெண்ணெயும்[1] ஏற்றுமதியாகின்றன.

18. பொணிஸிலிருந்து வலதுபுறம் செல்லும் அஸனியா துறைமுகப் பட்டினங்களிலே இவைதான் இறுதியானவை; இந்தப் பட்டினங்களுக்கு அப்பால் ஒருவருமறியாத சமுத்திரம்.[1] மேல்புறமாக வளைந்து இதோபியா, லிபியா, ஆபிரிக்கா முதலாய விடங்களுக்குத் தெற்கே யோடி மேல் கடலோடு கலக்கின்றது.

---

17. (1) மூலத்தில் நார்கிலியோஸ் (Nargilios) என்று காணப்படுகிறது. பிராக்ருதமான 'நார்க்கில்' (நாரிகேளம்) என்ற சொல்லிலிருந்து வந்தது. இந்த எண்ணெய் வியாபாரம் இந்தியர்களால் அந்த நாட்டிற்குக் கொண்டு போகப்பட்டதென்பதற்கு இது மற்றொரு உதாரணம்.

18. (1) அக்காலத்திலே இந்த இடத்திற்கு அப்பாற் சென்றவர்களில்லை யென்பது வெளிப்படை.

19. இனி, பொனிசை இடதுபுறமாக வைத்து முசல் துறைமுகத்திலிருந்து இரண்டு மூன்று நாட் பயணம் கடலிற் குறுக்கே சென்றால் வெள்ளைக்கிராமம்[1] என்ற காவலையுடைய பட்டினமுண்டு. அங்கிருந்து நபதேயர் அரசன் மலிகஸ்[2] (*Malichas*) ஆள்கின்ற பெட்ரா[3] (*Petra*) வுக்குச் சாலை செல்லுகிறது. இது அரேபியாவிலிருந்து செல்லும் சிறு மரக்கலங்களுக்கு அங்காடிப்பட்டினமாக விருக்கிறது. அதனாலே அங்கே சென்டூரியன்[4] (*Centurion*) என்றொரு உத்தியோகஸ்தர் ஒரு காவற் சேனையோடு தங்கி, அங்காடிக்கு வரும் பண்டங்களில் நாலிலொன்று தண்டிக்கொண்டு வசித்துவருகிறார்.

20. இதற்குக் கீழே அரேபியநாடு இருக்கிறது; அது எரித்திரேயன் கடலில் நீண்டிருக்கிறது. அந்த நாட்டிலே பாஷையில் முழுவதும் மிகுதியும் வேறுபட்ட பல வகைச் சனங்கள் வாழ்கிறார்கள். கடலையடுத்துள்ள நாடுகளில் இங்கு மங்குமுள்ள குடிசைகளில் புலாலுண்பவர்கள் வாழ்கின்றனர். உள் நாட்டில் இரு பாஷை பேசுகின்ற ஊர் ஊராய்த் திரியும் போக்கிரி ஜாதியார்[1] வாழ்கின்றனர். இவர்கள் கரை

---

19. (1) வெள்ளைக்கிராமம் (Leuke Kome). இதனை எல் ஹோரா (El Haura) என்பர் ; 25°7′ N., 37°13′ E.

(2) இவர் கி. பி. 70-ல் எருஸலேம் பட்டினத்தைப் பிடிக்க ஆயிரம் குதிரையும் 5000 ஆளும் அனுப்பிய அரபிய அரசன்.

(3) இது 30°19′ N., 35°31′ E-ல் இருக்கிறது.

(4) ஓர் உரோம உத்தியோகஸ்தன்.

20. (1) பெடுவின் கொள்ளைக்காரர் (Beduins). இவர்கள் கொள்ளைக்கார ராவதற்கு முக்கிய காரணம் நாட்டின் வரட்சியேயாம். வெயிலின் கொடுமையால் அந்நாட்டில் ஒன்றும் உண்டாவதில்லை. அதனாலேயே அவர்கள் திருட்டுத் தொழிலைக் கைக்கொள்ளுகின்றனர்.

யோரமாகச் செல்லுங் கப்பல்களைக் கொள்ளையடித்தும், அதிலுள்ள ஜனங்களை அடிமையாக்கி விற்றும் வாழ்கின்றனர். இவர்கள் இவ்வாறு வாழ்வதால் இவர்களை பல தடவைகளில் அரேபிய அரசர்களாலும் தலைவர்களாலும் சிறைபிடிக்கப்படுவார்கள்; இவர்களுக்குக் கர்னைட்ஸ் (*Carnites*) என்று பேர். இந்த அரேபிய கடற்கரை முழுவதும் கப்பல் தங்கச் சாலைகளுமில்லை; கப்பல் நங்கூரம் பாய்ச்சவும் சௌகரியமில்லை; மலைகளும் குன்றுகளும் அதிகமுண்டு; அதனால் கப்பலில் செல்லுவதும் மிகவும் அபாயகரமானது. இவைகளாலே மாலுமிகள் அரேபிய நாட்டில் தங்காது நடுக்கடலில் வேகமாகச் சென்று கரிந்ததீவை[2] (*Burnt island*) அடைகின்றனர்; இந்தத் தீவுக்குக்கீழே நல்ல சாந்த குணமுள்ள ஜனங்கள்—ஊர் ஊராய்த் திரிபவர்கள், ஆடு மாடு ஒட்டகம் மேய்ப்போர்—வாழ்கின்றனர்.

21. இவைகட்குக்கீழே குடாவின் இடது புறம் கரையிலே மூஸா[1] (*Muza*) என்றொரு அங்காடிப்பட்டினமிருக்கிறது; இது பெரனிஸிலிருந்து இரண்டாயிரம் ஸ்டேடியா தூரத்திலிருக்கிறது; இது சட்டப்படி ஏற்பட்டது. இந்தப் பட்டினம் முழுவதும் அரேபியக் கப்பற்காரரும் கடற் பிரயாணிகளும் நிறைந்து வாணிபத்தில் அமிழ்ந்து கிடக்கின்றனர். அவர்கள் தங்கள் சொந்தக் கப்பல்களை யனுப்பிப் பாரிகஸாவோடு வியாபாரம் செய்கிறார்கள்.

---

(2) இது ஜெபல் டைர் (Jebel Tair) என்ற தீவு; 15°35′N., 41°50′E.

21. (1) அரேபியாவிலுள்ள மொக்கா (Moccha) என்ற பட்டினம். பிளினியும் தாலமியும் மோஸா (Mauza) என்ற இடத்தில் மேற்குறித்த அங்காடிப்பட்டின மிருக்கலாமென அபிப்பிராயப் படுகின்றனர். துறைமுகம் மஸலாமென்பர். பிளினி கூறிய இரண்டு ஊர்களும் இன்றுமிருக்கின்றன.

22. இந்தத் துறைமுகத்திலிருந்து மூன்று நாட் பயணம் உள்நாட்டிற் சென்றால் மெபரிடிஸ்[1] (*Mepharetes*) நாட்டு மத்தியில் சௌவா[2] (*Sauva*) என்ற பட்டண மிருக்கிறது; இந்தப் பட்டணத்தில் கோலிபஸ் (*Cholaebus*) என்ற தலைவனிருக்கிறான்.

23. பின்னும் ஒன்பது நாட்பயணம் சென்றால் சபார்[1] (*Saphar*) என்ற தலைமைப் பட்டணமிருக்கிறது; ஹொமரிட்ஸ், சபயிட் சாதியார்களின் தலைவரான கரிபெல்[2] இங்கு வாழ்கின்றனர்; இடைவிடாது அனுப்பிய தூதுக்களாலும் சன்மானங்களாலும்[3] இவர் நமது சக்கரவர்த்திக்கு நண்பராவார்.

24. மூசா அங்காடிப்பட்டணத்தில் நல்ல கப்பற்சாலை யிராவிடினும் கடல் மணற்பாங்காக விருப்பதால் நங்கூரம் பாய்ச்ச இடமுண்டு. இங்கே பலவகைப் பண்டங்கள் இறக்குமதியாகின்றன. உயர்ந்ததும் மட்டமுமான தோம்பு, கைவைத்துத்தைத்த சாதாரணமானதும் பூவேலை செய்ததும் சரிகைகலந்ததுமான அரேபியதர உடுப்புக்கள்,

---

22. (1) ஹிமயாடிச்சாதியைச் சார்ந்த மாஎபிர் (Ma'afier) என்ற வகுப்பினர்

(2) இது மெக்காவுக்கு 40 மைல் வடக்கேயிருக்கிறது.

23. (1) மொக்காவுக்கு வடகீழ்பால் நூறு மைல் தூரத்திலுள்ள ஸாபர் Zafar என்ற ஊர்.

(2) இது அந்நாட்டு அரசர் பட்டம். Charibael என்பது Kariba-il என்ற சொல்லின் திரிபு. இதற்குக் 'கடவுள் அருள் பெற்ற' என்று பொருள்.

(3) அரபியர் உரோமர்களை இந்தியாவோடு நேரே வாணிபம் செய்ய விடுவதில்லை; அதற்காக அரபியரை உரோமர் மகிழ்ச்சி கொள்ளும்படியாக வைக்கவேண்டியதாகவிருந்தது.

குங்குமப்பூ, ஒருவகை வசம்பு[1], மஸ்லின் உடுப்பு, சாதாவும் நாட்டுமோஸ்திரியுமான அப்பட்டு, பலவித நிறமுள்ள இடுப்புக்கச்சை, போதிய அளவு பல்வகைச்சாந்துக்கலவை,[2] சிறிது சாராயமும், கோதுமையுமாம். அங்கேயே நாட்டில் போதிய அளவு தானியமும் ஏராளமாகச் சாராயமும் கிடைக்கின்றன. அரசனுக்கும் நாட்டுத்தலைவனுக்கும் சவாரிக்குதிரைகளும், பொதிக்குதிரைகளும், பொற்கலங்களும், மெருகிட்ட வெள்ளிப் பாத்திரங்களும், நயமாக நெய்த ஆடைகளும், செப்புப் பாத்திரங்களும் கொடுக்கப்படுகின்றன. இந்த நாட்டிலிருந்து முதற்றரமான பாக்கிச்

---

24. (1) வசம்பு. மூல ஏட்டில் Kyperos என்றிருக்கிறது. இதனை Sweet rush என்று மொழிபெயர்த்திருக்கின்றனர். சிரிய நாட்டுக் கலமஸ் என்றும் சிரிய நாட்டு கஸீட்ராஸ் என்றும் இருவகையுண்டு என்று பிளினி கூறுவர். இவை பார்த்திய அரசர் முடிசூட்டு மங்கல நீரில் உபயோகப்படுவன. கஸீட்ராஸ் என்ற பண்டம் எகிப்திலிருந்து வருவது. ரோட்ஸ் நாட்டிலிருந்து வருவது இரண்டாந்தரத்தது. இது சடாமாஞ்சியைப்போன்ற மணமுடையது. சாந்திற் சேர்க்கப்படுவதன்றி மூத்திரகாரி மருந்தாகவும், தொண்டைப் புண்ணை யாற்றத் திராட்சைச் சாறு, காடி இவைகளோடு கலந்துண்ணும் மருந்தாகவும், புண்களையாற்ற பூச்சுமருந்தாகவும் உபயோகப்படும். மக்கிரிண்டில் மஞ்சள் அல்லது சித்தரத்தை யென்பர். இவை யிரண்டுமல்ல. வசம்புபோன்ற ஒரு வாசனைப்பண்டம்.

(2) கலவைச்சாந்து. வாசனைப் பண்டங்கள் என்னென்ன வகை உண்டோ அவ்வளவையும் சேர்த்துக் குழம்பாகச் செய்து உடலில் அணிவதுண்டு. பிளினி கலவைச் சாந்தைக்குறித்துப் பின்வருமாறு எழுதுவார். 'அவை தைலம் அல்லது பூரலமென்றும், கெட்டிச்சாந்து என்றும் இருவகைப்படும். இவற்றோடு வன்னப்பண்டமான சிவப்புச் சாயம் (Cinnabar) சேரும். மணம் அவற்றில் தங்குவதற்காகப் பிசின் சேர்ப்பதுமுண்டு. தைலவகை

சாம்பிராணி,[3] மட்டிப்பால்,[4] அலாபாஸ்டர்;[5] இவை களுக்கு அவ்விடன் முதலான இடங்களிலிருந்து ஏற்று மதியாவதைப் போன்ற பண்டங்கள் முதலியனவும் ஏற்று மதியாகின்றன. இந்த இடத்திற்குச் செப்டம்பர் மாதத் தில் பிரயாணம் போகின்றனராயினும் சிறந்த முறையே போனதினும் கெடுதலில்லை.

ல் சேரல் அத்தர், ஸ்டீட்ராக்ஸ், கைப்பு, ஸைலோ—பால்ஸாமம் (Xylo-Balsamum), தம்பப்பூண்டு (Myrtle), ஸைப்ரஸ் (Cypress), மாஸ்டிக் (Mastich), மாதுளந்தோல், குங்குமப்பூத் தைலம், அல்லினா, வெந்தயம், பாலிச்சாம்பிராணி, இலவங்கம், சடா மாஞ்சி, கருவாப்பட்டை முதலியவை அடங்கும். சாந்தின் தூபம், சடாமாஞ்சி, பாலிச் சாம்பிராணி, பல்ஸாம் (Balsam), கோஷ்டம் மருக்கொழுந்து (Marjoram) இவைகள் சேரும்; பார்த்திய அரசாது உபயோகத்துக்கு ஏற்பட்ட சாந்து வகைகளில் ஏலக்காய், கோஷ்டம், தூபம், கருவாப்பட்டை, கோமாகம் (Comacum), ஏலம், சடாமாஞ்சி, மரும் (Marum), வெள்ளைக்குங்கிலியம், மாஸ்டிக், ரெசினிப்பால், [illegible], [illegible], புல்லு, குங்குமப்பூ, கைப்பு, தாமரை, தேன் முதலியவை சேரும்; மற்றும் பலவிதமும் உண்டு.

(3) பாலிச் சாம்பிராணி. Myrrh. இது ஒரு மரத்தின் பால். தெற்கு அரேபியா, துமான், சோமாலி கடற்கரைகளிலுண் டானது. மரத்தின் பட்டைக்குமேல் பால் வடிவது. சாம்பிராணி யோடு சேர்த்துப் புகைக்கப்படுவது.

(4) மட்டிப்பால். Gebanite-Minaean Stacte. மினிய நாட்டில் வாசனை தரும் மரங்களிலிருந்து வடியும் பால் என்பது பொருள். இது முற்காலத்தில் யூதர்களால் தூபப் பண்டங்களி லொன்றாக உபயோகப்பட்டுவந்தது. இப்பொழுது வைத்தி யத்தில் சேர்க்கப்படுவது.

(5) அலாபாஸ்டர். Alabaster. இது ஒருவகை வெள்ளைக் கல். பளிங்கையொத்தது. இதனால் பெட்டி முதலியன செய் யப்படுகின்றன; தைலம், வாசனைப் பண்டம் வைக்கத் தகுதி யானவை.

25. இதற்குக் கீழ் 300 ஸ்டேடியா சென்றால் அரபியாவும் பெர்பர்நாடும் நெருங்குகின்றன; இந்தப்பாகத்திலொரு குறுகிய ஜலசந்தி ஓடுகிறது[1]; இதன் நீளம் 60 ஸ்டேடியா. இந்த இரண்டு நாட்டையும் டியோடோரஸ்[2] (*Diodorus*) என்ற தீவு பிரிக்கிறது. இந்தச் சலசந்தி வழியாகச் செல்லும்போது வேகமான நீரோட்டமும் பக்கத்து மலைகளிலிருந்து அடிக்கும் காற்றும் துன்பம் செய்யும். இந்தச் சலசந்தி முடியுமிடத்திலே கரையோரமாக ஒவலிலிஸ்[3] என்ற பட்டிணமிருக்கிறது; இது ஒரு பெரிய அங்காடிப் பட்டின்மல்லவாயினும் ஜலசந்தியில் வருபவர்கள் தங்கும் முதல் துறையாகும்.

26. ஒவலிலிஸுக்கப்பால் கடல் கிழக்குப் பக்கமாக விரிந்து சமுத்திரம் போலாகிறது; 1200 ஸ்டேடியாவுக் கப்பால் யூதமன் அரேபியா[1] என்ற கிராமம் இருக்கிறது; இதுவும் கரிபெல் அரசனுக்குச் சொந்தம். இங்கே ஒவலிலிஸைவிடக் கப்பல் தங்க நல்ல சாலையும் நல்ல தண்ணீருமுண்டு; இந்தக் கிராமம் குடாவுக்குள் நுழையும் வாயிலிலிருக்கிறது. இந்தியாவிலிருந்து எகிப்துக்கு நேரே பிரயாணம் செய்யாதபோதும், அங்காட்டுப் பண்டங்கள் எகிப்துக்கு நேரே செல்லாது இந்தத் துறை

---

25. (1) ஜலசந்தி. இந்த நீரோட்டத்திற்கு Strait of Bab-el mandeb என்று பெயர்.

(2) டியோடோரஸ். பெரிம் (Perim) என்ற தீவு.

(3) ஒலிலிஸ். செல்லா (Cella) என்ற ஊர்.

26. (1) யூதமன் அரபியா. ஏடன் பட்டினத்தின் பழைய பெயர். இது ஒரு புராதனமான பட்டினம். மத்திய தரைக் கடலிலுள்ள நாடுகளுக்கு இந்தியாவிலிருந்து செல்லும் பண்டங்கள் இங்கேதான் மாற்றப்படுவது வழக்கம்.

முகத்துக்கு வந்து போனபோதும், இப்போது அந்த வியாபாரம் அலெக்ஸாண்டிரியா மூலம் நடப்பது போலும் நடந்தகாலத்தில் இந்த ஊருக்கு யூதமன் என்று பெயரிடப் பட்டது. கரிபெல் அரசன் நமது காலத்துக்குச் சிறிது முன்னர் அந்தப் பட்டினத்தை யழித்துவிட்டான்.

27. யூதமன் அரேபியாவுக்கு அப்பால் இடைவிடாது செல்லும் கரையும் இரண்டாயிரம் ஸ்டேடியாவுக்குமேல் நீளமுள்ள ஒரு வளைகுடாவுமிருக்கிறது. இந்தக் கரையோரமாக நாடோடிகளும் (*Nomads*) புலாலுண்பார்களும் வாழ்கின்றனர்; இந்த வளைகுடா திரும்பும் முனையில் முன் நீண்டு வந்துள்ள கானு[1] (*Cana*) வென்ற அங்காடிப் பட்டினம் இருக்கிறது. சாம்பிராணி விளையும் நாடான இலியாசஸ் (*Eleazus*) இராச்சியத்தில் இந்த ஊர் இருக்கின்றது. கானுவிலிருந்து இருநூறு ஸ்டேடியா அளவில் அதற்கெதிரில் வெட்ட வெளியான பறவைத் தீவும், டோம் தீவும் (*Dome Islands*) இருக்கின்றன. இந்தக் கானுவிலிருந்து உள்நாட்டுப் புறமாக ஸபதா[2] (*Sabbatha*) என்ற தலைமைப்பட்டண மிருக்கிறது. அங்கே அரசன் வசிக்கிறான். இந்நாட்டிலுண்டாகும் சாம்பிராணி முழுவதும் ஒட்டக முலமாக இங்கே கொண்டுவரப்படுகிறது. அது இங்கிருந்து தோலாலான குடத்தெப்பங்களிலும்[3] படகுகளிலும் கானுவுக்குக் கொண்டுபோகப்படுகின்றது. இங்கிருந்து தொலைவுத் துறைமுகங்களுக்கும்

---

27. (1) கானு. ஹிஸ்ன் கோரப் (Hisn ghorab) என்ற ஊர். 14°10′N., 48°20′ E.

(2) ஷப்வா (Shabwa) என்றும் சொல்லப்படும்.

(3) தெப்பம். தோலில் காற்றடைக்க அது உப்பினபோது தண்ணீரில் போட மிதக்கும் மிதவை.

பாரிகஸா, ஸித்தியா, ஓமானு, பாரசீகம் முதலான விடங்களுக்கும் வியாபாரம் நடக்கிறது.

28. மூசாவைப்போன்று இங்கும் எகிப்திலிருந்து சிறிது கோதுமையும் சாராயமும் இறக்குமதியாகின்றன; சாதாவும் பொதுவும் போலியுமான அரபிதினுசு உடைகள்; மூசாவுக்குச் செல்வது போன்று செம்பு, தகரம், பவளம்,[1] நெரியரிசிப் பால்[2] முதலான பண்டங்கள்; அரசனுக்கு வேலைப்பாடான தங்கத் தாம்பளங்களும், வெள்ளித் தட்டுகளும், குதிரைகளும், படிமங்களும்,[3] நல்ல ஆடைகளும் போகின்றன. இங்கிருந்து நாட்டுப் பொருள்கள், சாம்பிராணி, கரியாபோளம்[4] மற்றும் பலவிதப் பண்டங்களும் ஏற்றுமதியாகின்றன. இந்த இடத்திற்குச் செல்ல வணிகர் மூசாவுக்குச் செல்லப்புறப்படும்பொழுதும் கொஞ்சம் முன்னும் புறப்படுகின்றனர்.

29. கானுவுக் கப்பால் பூமி உள்நாட்டிலே வளைவதால் பெருத்த ஆழமான குடா உண்டாகிறது; அதனைச் சகலிடஸ்[1] (*Sachalites*) என்பர்; அதனை யொட்டிச் சாம்

---

28. (1) பவளம். மத்தியதரைக்கடலி லுண்டாகும் பவளம் சிறந்ததாகக் கருதப்பட்டு மூசிரி முதலான இடங்களில் வியாபாரம் செய்யப்படுகின்றன.

(2) நேரியரிசிப்பால். இதனை நெரியாசம் என்பர். இது முற்காலத்தில் கோயில்களில் தூபப்பண்டமாக உபயோகப்பட்டுவந்தது; இதுபொழுதும் ஊதுவர்த்தி முதலியவற்றிற் சேர்க்கப்படுகிறது.

(3) படிமங்கள். அரசன் தொழுவதற்காகச் செதுக்கப்பட்டவை.

(4) கரியாபோளம். (Aloes.) இது இரத்தக்கட்டு முதலானவைகட்கு உபயோகப்படும் ஒருவகைக் காய்ச்சிய பிசின்.

29. (1) ஸகலிடஸ். அரபு பாஷையில் ஸகில் என்றசொல்லுக்குக் கரை யென்று பொருள். இச்சொல்லை கிரேக்கமயமாக்கி விட்டனர்.

பிராணி விளையும் நாடு இருக்கிறது; இது மலையடர்ந்த தாயும், மக்கள் வாழ்வதற்குத் தகுதியற்றதாயும், பனியும் மேகமும் அடர்ந்ததாயும், சாம்பிராணி மரங்கள் நிறைந்த தாயுமிருக்கிறது. இந்தச் சாம்பிராணி மரங்கள் உயர மானவையுமல்ல, பருத்தவையுமல்ல; எகிப்தில் மரங்கள் பிசின் விடுவதுபோல் இந்த மரங்களிலும் பால் பட்டை மேல் வடிகின்றது. வடிந்தவை அரசனுடைய அடிமை களாலும், தண்டனை யடைந்த கைதிகளாலும் சேர்க்கப்படு கின்றன. இந்த நாடு மிக்க நோயுடையதும் வாழ்வதற்குச் சௌக்கியமற்றதுமான நாடு.[2] கரையோரமாகக் கப்பலிற் செல்வோரும் நோயடைகின்றனர்; அங்கு வேலை செய்ப வர்கள் நோயினாலும் பசியினாலும் உயிர்விடுகின்றனர்.

30. இந்தக் குடாவில் கிழக்கு நோக்கி சியாகுருஸ்[1] (*Syagrus*) முனைப்பு இருக்கிறது; அதனில் அந்நாட் டைக் காக்க ஒரு கோட்டை யுண்டு; ஒரு துறைமுக மும் சாம்பிராணிக் கிடங்கு மிருக்கிறது. இந்த முனைக் கும் இலவங்க முனைக்கும் எதிரில், சியாகுருஸுக்குச் சமீபமாய் டயஸ் கோர்டியா[2] என்ற பேருடைய ஒரு தீவு இருக்கிறது. இது பாலை நிலமாயும் சதுசதுப் புள்ள தாயும் முதலைகள், பெரும்பாம்புகள், உடும்புகள் நிறைந்ததாயும் இருக்கிறது. இந்தப் பிராணிகளின் கொழுப்பையெடுத்துக் காய்ச்சி ஒலிவை யெண்ணெய்க்குப்

---

(2) இந்நாடு வாசயோக்கிய மற்றது என்பது பலர் துணிபு.

30. (1) சியாகுருஸ் என்பது ராஸ் பார்டாஹ் (Ras Fartah) என்று வழங்குகிறது. 15°36′ N., 52°12′ E.

(2) டயஸ்கோர்டியா. இது சோகோத்ரா (Socotra) என்று வழங்குவது. 12°30′ N., 54° 1′ E. சுகாதார த்வீபம் என்பது இப்படி மருவி நிற்கிறதென்பர்.

(*Olive oil*) பிரதியாக உபயோகின்றனர். உடும்பின்[3] தசையை யுணவாகக் கொள்ளுகின்றனர். இந்தத் தீவில் கனிகளாவது திராட்சையாவது வேறு தானியமாவது கிடையா. சனங்களும் வெகு சொற்பம். அவர்கள் கரையோரமாக எதிர் கரையிலுள்ள நாட்டை நோக்கி வாழ்கின்றனர். அவர்களும் அரபியர் இந்தியர் கிரேக்கர் கலந்த கலப்பு மக்களாய் வியாபாரத்தின் பொருட்டுத் தங்கியவர்கள். அத்தீவில் நாட்டு ஆமையும் கடலாமையும் வெண்கல ஆமையும் இருக்கின்றன; வெண்கல ஆமையோடு அதிகம்; இது பெரிதாக விருப்பதால் பலரும் விரும்புகின்றனர்; மலே ஆமை எல்லாவற்றிலும் பெரிதாகவிருப்பதோடு கனத்த ஓடுமுடையது; பிரயோசனமற்ற ஓடுகூட அடிப்புறம் உடைக்க முடியாதபடி அவ்வளவு உறுதியானது; நல்லவையும் நாணயமுமான ஓடுகள் நகைப்பெட்டிகளாகவும், தட்டுகளாகவும், பணிகாரத் தாம்பாளங்களாகவும் செய்யப்படுகின்றன. இந்திய நாட்டுப் பண்டமென்று கருதப்படுகிற சாயக்கட்டி[4] (*Cinnabar*) இங்கே மரங்களினின்று பாலாக எடுக்கப்படுகின்றது.

31. அஸெனியா நாடு கரிபெல் அரசனுக்கும் மெபரிடஸ் தலைவனுக்கும் உட்பட் டிருப்பதுபோல இந்தத் தீவும்[1] சாம்பிராணி விளையும் நாட்டு அரசனுக்கு உட்பட்

---

(3) உடும்பினை ஐரோப்பியர் விரும்புவதாகத் தெரியவில்லை. இந்திய நாட்டில் உடும்பு மாமிசம் மேலானதாகக் கருதப்படுகிறது.

(4) சாயக்கட்டி. இது யானையும் யாளியும் சண்டையிட்டு இறப்பதாலுண்டான இரத்தமென்று ஒரு காலத்தில் கருதப்பட்டது. இங்கே கூறப்பட்டது மரத்திலிருந்து வடியும் பால். சாதிலிங்கமும் வின்னுபார் என்று பேர் பெறும்.

31. (1) சோகோத்தரா தீவு. தென் அரபியாவிலுள்ள மஹ்ரா (Mahra) நாட்டுக்குச் சொந்தம்.

டிருக்கிறது. மூசாவிலிருந்து வரும் ஜனங்களும், தமிழகம், பாரிகஸா சென்று திரும்பும் ஜனங்களும் இவ்விடம் வியாபாரம் செய்கின்றனர்; அரிசி, கோதுமை, இந்தியத் துணி, அடிமைப் பெண்கள் இவைகள் கொண்டு வருகின்றனர். இவைகட்குப் பண்டமாற்றாக ஆமையோடு வாங்குகின்றனர். இப்பொழுது இந்தத் தீவு அரசனால் காக்கப்பட்டும்[2] குடிகளுக்குப் பயிர்செய்யக் கொடுக்கப்பட்டும் வருகிறது.

32. சியாகுருவை யடுத்துக் கீழே ஓமானகுடா[1] கரையைக் குடைந்து செல்லுகிறது; அதன் நீளம் 600 ஸ்டேடியா. இதற்குப் பின்னால் உயரமும் செங்குத்துமான மலைகள் இருக்கின்றன. 500 ஸ்டேடியா தூரம்வரை குகைவாழ்நர் வாழ்கின்றனர். இதற்கு அடுத்து மோஸ்கா[2] (*Moscha*) என்றொரு துறைமுகம் இருக்கிறது. அங்கே சகலிடிஸ் நாட்டில் உண்டாகும் சாம்பிராணி முழுவதும் கொண்டுவரப்படுகின்றது. கானாவிலிருந்து கப்பல்கள் ஒழுங்காக வந்து செல்லுகின்றன. தமிழகம்[3] பாரிகஸாவிலிருந்து நாட்கழித்துத் திரும்பி வரும் கப்பல்கள் இங்கே மாரி மழை காலத்துக்குத் தங்குகின்றன. கப்பலிலுள்ளவர்கள் அரசனது உத்தியோகஸ்தர்களிடம் தங்களிடமுள்ள ஜவுளி, கோதுமை, நல்லெண்ணெய் முதலியவற்றைக் கொடுத்துச் சாம்பிராணி வாங்குகிறார்கள். இந்தச் சாம்

---

(2) காப்பு. பக்கத்திலுள்ள அரசர் இத்தீவைப் பிடித்துக் கொள்வதற்கு எப்பொழுதும் கருத்துள்ளவர்.

32. (1) ஓமானகுடா. The Bay of Omana. இதுபொழுது கமார் பே (Khmar Bay) என்று சொல்லப்படும்.

(2) மோஸ்கா. கோர் ரீரி (Khor Reiri) என்று இப்பொழுது சொல்லப்படுகிறது.

(3) தமிழகம். கேரள நாடுட்பட்ட தமிழ் நாடு.

பிரகாசி சகலிழுக் கரை முழுவதும் யாதொரு கண்காணிப்புமின்றி சேகரித்துக் குவியல் குவியலாகக் கொட்டப்பட்டிருக்கின்றன. தெய்வத்தால் காப்பாற்றுகிற தென்று கப்பலேவண்டியிருப்பினும் அரசனுடைய அனுமதி யின்றி அதிக்கேதா மறைவாகவோ கப்பலில் சிறிது சாம்பிராணிகூட ஏற்ற முடியாது; ஒரு கட்டி சாம்பிராணி கப்பலேற்றப்படினும் கப்பல் துறைமுகம் விட்டுப் பெயர முடியாது.

33. மொக்காதுறைக்கும் கீழ் அஸிக்[1] (Asich) வரை 1500 ஸ்டேடியா அளவு கரையோரமாக ஒரு மலைத் தொடர் செல்லுகிறது. அதன் கோடியில் வரிசையாக ஸெனோபியன (Zenobian) என்ற ஏழுதீவுகள்[2] இருக்கின்றன. இவற்றிற் கப்பால் இது பொழுது பாரசிகத்துக்குச் சொந்தமான ஒரு பிரதேசக் கரை இருக்கிறது. இந்த ஸெனோபியன் தீவுகளிலிருந்து இரண்டாயிரம் ஸ்டேடியா கடிக்கடலிற் சென்றால் கரையிலிருந்து 120 ஸ்டேடியா தூரமுள்ள ஸராபிஸ்[3] (Sarapis) என்ற தீவு எதிர்ப்படும். இந்தத் தீவு இருநூறு ஸ்டேடியா அகலமும், 600 ஸ்டேடியா நீளமுங் கொண்டது; அதனில் மிக்கக் கொடியவர்களான மூன்று புலாதுன்றும் வகுப்பினர் வாழ்கின்றனர்; அவர்கள் அரபுபாஷை பேசுகின்றனர். பனையோலையை ஆடையாக அணிகின்றனர். வெகு கேர்த்தியான ஆமையோடு இங்கே கிடைக்கின்றன. கானனிலிருந்து சிறு கப்பல்களும் பண்ட மரக்கலங்களும் முறையாக வருகின்றன.

---

33. (1) அஸிக். ராஸ் ஹஸிக் (Ras Hasik) என்ற ஊர்.
(2) எழுதீவு. குரியா முரியா (Kuria Muria) என்ற பேர்.
(3) ஸராபிஸ். மாஸிராதீவு (Masira). 20°20′N., 58°40′E.

34. பாரசீக வளைகுடாப் பக்கமாக வடக்குமுகமாகச் செல்லும் கரையோரமாகப் பயணஞ்செய்தால் இரண்டாயிரம் ஸ்டேடியாவுக் கப்பால் கலேயி[1] (*Calai*) என்ற தீவுகள் இருக்கின்றன. அங்கு வாழும் ஜனங்கள் நாகரீகமற்ற மோசக்காரர்.

35. கலேயி தீவுகளின் வடகோடியில் கலோன் என்ற மலைகள் இருக்கின்றன; அதனை யடுத்துப் பாரசீக வளைகுடா முகத்துவாரம் இருக்கிறது; அங்கு முத்துச் சலாபம் குளிக்கின்றனர். ஜலசந்தியின் இடதுபுறம் அஸபோன் (*Asabon*) என்ற பெரிய மலைத்தொடர் இருக்கிறது; வலது புறத்திலும் செமிராமிஸ் (*Semiramis*) என்ற பெரிய மலைத்தொடர் இருக்கிறது. இவைகட்கு நடுவே 600 ஸ்டேடியா அளவு ஜலசந்தியைக் கடக்க வேண்டும். இவைகட்கப்பால் பாரசீக வளைகுடா என்ற அகன்ற கடல் இருக்கிறது. வளைகுடாவின் வடகோடியில் சட்டப்படி ஏற்பட்ட அபோலோகஸ்[1] (*Apologus*) என்ற அங்காடிப் பட்டினம் இருக்கிறது. இது யூபரடீஸ் நதிக்கும் சாரக்ஸ் ஸ்பஸினிக்கும்[2] (*Charax Spasini*) அருகிலிருக்கிறது.

36. வளைகுடாவின் வாய்வழியாக ஆறுநாள் பயணம் சென்றால் ஓம்மானு[1] (*Ommana*) என்ற பாரசீக நாட்டு அங்காடிப் பட்டினமிருக்கிறது. இந்த இரண்டு அங்காடிப்

---

34. (1) கலேயி. தய்மானியாத் தீவுகள். மஸ்கட்டுக்கு வடமேற்கிலிருக்கின்றன. இப்பொழுது கல்ஹாத் (Kalhat) என்று பேர்.

35. (1) அபோலோகஸ். ஒபல்லா (Obollah) என்ற ஊர். (2) மஹமரா (Mahommarah) என்ற ஊர். 30° 24′ N., 48° 18′ E.

36. (1) ஓம்மானு. ஓமான் (Oman) பட்டினம்.

பட்டினங்களுக்கும் பாரிகஸாவிலிருந்து செம்பு, சந்தனம்,[2] தேக்கமரம், சிஸே மரம்[3] கருங்காலி[4] முதலிய பண்டங்களை யேற்றிக்கொண்டு மரக்கலங்கள் முறையாக வந்து போய்க் கொண்டிருக்கின்றன. கானுவிலிருந்து சாம்பிராணி ஓம்மானுவுக்குக் கொண்டுவரப்படுகின்றது; ஓம்மானுவிலிருந்து அரேபியாவுக்கு அந்நாட்டு வழக்கப்படி மதாராடா[5] (*Madarata*) என்ற கட்டுத்தோணிகள் செல்லுகின்றன. இந்தப் பட்டினங்களிலிருந்து பாரிகஸாவுக்கும் அரேபியாவுக்கும் முத்துக்கள் ஏற்றுமதி யாகின்றன; ஆனால் அவை இந்திய முத்துக்களுக்குக் கீழ்த்தரமானவை. நாட்டுக்கு வேண்டிய தோம்பு, சாராயம், பேரீச்சை, பொன், அடிமை வியாபாரம் முதலியன நடக்கின்றன.

37. ஓம்மானு நாட்டுக்கு அடுத்தாற்போல் பர்சிதே[1] (*Parsidae*) இராச்சியமும், கெட்ரோஸியா[2] (*Gedrosia*)

---

(2) சந்தனம். இது கிரேக்க தேசத்துக்குச் சென்றதாகக் காணப்படுவது இதுதான் முதல் தடவை.

(3) சிஸே, (*Dalbergia cissoo*).

(4) கருங்காலி. (*Diospyros ebenum*). கருங்காலி கி. மு. 500லேயே இந்தியாவிலிருந்து எகிப்துக்குக் கொண்டுபோகப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

(5) மதர்ரட் (Muddarra'at) என்ற அரபுச் சொல் தென்னை நாரால் கட்டப்பட்டது என்று பொருள்படும். கட்டுத் தோணிகள் இன்றும் தென்னிந்தியாவில் வழக்கிலுள்ளது.

37. (1) பர்சிதே. பாரசீக நாடு. (Persia). இது முதலில் பாரசீகமென்றும் பின்னணி காலத்தில் பார்த்தியா (Parthia) என்றும் பேர்பெற்றது. இதுபொழுது குறுகின நாடாய்ப் பாரசீகம் என்றே பேர்பெறும்.

(2) கெட்ரோஸியா. இது ராஸ் ஆர்மரா (Ras Ormara) என்ற முனைக்குப் பக்கத்திலிருக்கும் ஒரு சிறிய வளைகுடா.

வளைகுடாவுமிருக்கிறது; இந்த வளைகுடாவின் மத்தியிலிருந்து ஒரு முனை நீளுகிறது. இவ்விடத்தில் கப்பல்கள் செல்லும்படியாக ஆற்று முகமும் ஓரியா[3] (*Oraea*) என்ற அங்காடிப் பட்டினமும் இருக்கிறது. கடற்கரையிலிருந்து ஏழுநாட் பயணத்தில் ரம்பாஷியா என்ற ஊர் இருக்கிறது இது இராசதானிப் பட்டினமாம். இந்நாட்டில் கோதுமை, சாராயம், அரிசி, பேரீந்து உண்டாகின்றன; கரையோரமாகக் குங்கிலியம்[4] விளைகின்றது.

38. இந்த நாட்டுக்கப்பால் தேசம் கிழக்கிலிருந்து வளைகுடாவின் குறுக்காகப் பெரியதொரு வளைவு வளைகிறது; அந்த நாட்டுக்கு ஸித்தியா (*Scythia*)[1] என்று பெயர்; இது வடபுறமாகக் கடற்கரையோரமாகச் செல்லுகிறது; நிலம் சதுப்புடையது; எரித்திரேயன் கடலில் விழும் நதிகளில் மிகப் பெரிதான ஸிந்துஸ் நதி இங்கு பெருவெள்ளத்துடன் வந்து கலக்கின்றது; இதனால் இதன் முகத்துவாரத்தில் கடற்பக்கம் வெகு தூரம் கடல்நீர் உப்பின்றி நன்னீராக[2] இருக்கிறது. கடற் பிரயாணஞ் செய்வோர்

---

(3) ஓரியா சோன்மியானிவளைகுடா (Sonmiani Bay) வில் இருக்கிறது. ஆற்றுக்குப் புரளி (Purali) என்று பெயர். இந்த நதி பெரிபுளூஸ் காலத்தில் இப்பொழுது மணல்மேடிட்டுப்போன ஒரு குடாவில் விழுந்தது. ஓரிதே (Oritae) என்ற ஜனங்கள் வசித்ததாகவும் அவர்கள் நாடு இது என்றும் பிளினி கூறுவர். அக்காலத்தில் பெலுச்சிஸ்தானம் பார்த்தியர் என்ற பாரசிகர் வசமிருந்தது.

(4) குங்கிலியம். (*Balsamodendron mukul*), இது இந்தியாவிலும் விளைகிறது.

38. (1) ஸித்தியா: ஸிந்துநதி யோடும் பகுதிக்கு மேற்கிலுள்ள நாட்டுக்கு ஸித்தியா என்று பெயர்.

(2) நன்னீர்: ஆற்றில் வெள்ளம் மிகுதியாக வந்து கடலில் கலக்கும் போது ஆற்று நீரின் வேகத்தினால் கடல்நீர் ஒதுக்கப்பட்டு

இந்த நாட்டைக் கிட்டியதற்கறிகுறியாக நாகங்கள் பல கடற் கீழிருந்து மேல் வரும். இங்கும் பாரசீகத்திலும் இவை கிரயி[3] (*Graoe*) என்று பேர்பெறும். இந்நதி (ஸிந்து) ஏழு கிளைகளை யுடையதாயினும் மத்தியிலுள்ளதைத் தவிர்த்து மற்றவை ஆழமற்றவை. அந்த நடுக்கிளையின் முகத்துவாரத்தில் பர்பரிக்கம்[4] (*Barbaricum*) என்ற அங்காடிப்பட்டின மிருக்கிறது. இதற்கு எதிரில் ஒரு சிறு தீவு இருக்கிறது. பின்னே ஸித்தியாவின் தலைநகரான மின்னகரம்[5] (*Minnagara*) இருக்கின்றது; இந்நகரம் பார்த்திய[6] அரசர்களுக்குரியது; அவர்களோ தங்களுக்குள்ளேயே சண்டையிட்டுக் கொண்டு ஒருவரையொருவர் துரத்தி வருகின்றனர்.

39. மரக்கலங்கள் பர்பரிக்கத்தில் தங்குகின்றனவாயினும் பண்டங்களெல்லாம் தலைநகரிலுள்ள அரசனுக்கு

அங்கு உள்ளது நல்ல நீராகவே இருப்பது இன்றும் தென்னிந்தியாவில் காண்பதொரு காட்சி.

(3) கிரயீ என்பது கிரக என்பதின் திரிபென மேல்நாட்டார் கருதுகின்றனர். அது பொருத்தமானதாகத் தோற்றவில்லை. அது அங்கு காணப்படும் பாம்புவகையின் பெயராயிருத்தல் கூடும்.

(4) பர்பரிக்கம்: கிரேக்கர் இந்நாட்டில் கேட்ட ஒரு சொல்லைக் கிரேக்கமயமாக்கியதால் இவ்வூரின் உண்மைப் பெயர் கண்டுபிடிப்பது முடியாததாகிறது.

(5) மின்னகரம்: சித்தியர் இந்தியாவிலிருந்தபோது தாங்கள் கண்ட பட்டினத்திற்கெல்லாம் மின்னகரம் என்று பெயரிட்டனர். இது இன்ன இடமெனத் திட்டமாகக் கூறுவதற்கில்லை.

(6) பார்த்திய அரசர்களாவார் மத்திய ஆசியாவிலிருந்து படையெடுத்து வந்து சிந்துப் பிரதேசங்களைப் பிடித்தாண்ட பாரசீக சாதியினர்.

ஆற்றின் வழியே[1] கொண்டு போகப்படுகின்றன. இந்த அங்காடிப் பட்டினத்தில் நல்ல உயர்ந்த சல்லா, சிறிது போலிச் சல்லா, குங்கிலியம், சித்திரப்பட்டாடை,[2] நீலம், பவளம், நெரிடாசம், வெள்ளைப்போளம், கண்ணாடிப் பாத்திரங்கள், பொன் வெள்ளித் தாம்பாளங்கள், சிறிது சாராயம் இவை இறக்குமதியாகின்றன. இவற்றிற்கு மாறாகக் கோஷ்டம்[3] குங்கிலியம், லிஸியம்,[4] வாசனை வேர்,[5] டர்கோயிஸ்[6] (*Turquoise*), மரகதம், இருப்புக்கட்டிகள், பருத்தித்துணி, பட்டு நூல், நீலச்சரக்கு இவை ஏற்றுமதியாகின்றன. இவ்விடத்திற்குக் கப்பலோட்டிகள் ஜூலை மாதத்திலுண்டாகிற இந்திய எதிஸியக் காற்றில் புறப்படுகின்றனர்; இக்காற்று மிக்க அபாயமுடையதெனினும் இக்காற்றில் பயணமானால் விரைவிலும் நேர்முகமாகவும் குறித்த இடத்தைச் சேரலாம்.

40. ஸிந்து நதிக்கப்பால் வடமுகமாகச் செல்லும் மற்றொரு வளைகுடா வுண்டு; அதனில் கப்பல் செல்லாது;

---

39. (1) ஆறு: ஸிந்துநதி வழியே.

(2) சித்திரப்பட்டாடை: மூல எட்டில் போலிமிதா (Polymita) என்றிருக்கிறது. இச்சொல்லுக்குப் பல இழைகள் கொண்டது என்று பொருள்.

(3) கோஷ்டம்: ஒரு மருந்துச் சரக்கு. Costus Specious.

(4) லிஸியம் என்பது இமயமலையிலுண்டாகும் மஞ்சட்சாயம் கொடுக்கும் ஒருவகை வேர். இவ் வேரிலிருந்து சாயமும் மருந்துகளும் செய்யப்பட்டன.

(5) வாசனைவேர்: சடாமாஞ்சி முதலியன. சுக்குநாறிப்புல் கிழங்கென்பர்.

(6) டர்கோயிஸ்: பச்சை கலந்த நீலம். இது முதலில் துருக்கியிலிருந்து வந்ததாகக் கருதப்பட்டதால் இப்பெயரிடப்பட்டது. பாரசீகத்தில் கிடைக்கிறது.

அதற்கு எயிரினேன்[1] (*Airinon*)என்று பெயர்; அதன் பிரிவுகளைப் பெரிய குடா வென்றும் சிறியகுடா வென்றும் சொல்லுவர்; இவ்விருபிரிவுகளும் கரையிலிருந்து வெகு தொலைவிலுள்ளன; மேட்டுப் பாங்காயும் அடிக்கடி மாறும் மணற்றிட்டு முடையன; இதனால் கடலில் வரும் கப்பல்கள் நாடு காணுமுன்னரே கரை தட்டிவிடு கின்றன. இந்தக் குடாவினின்றும் ஒரு முனைப்பு எயிரினேனைச் சுற்றிக் கீழ்ப்புறமாகப் புறப்பட் டோடித் தென்புறம் சென்று வளைந்து மேற்கேயோடிப் பராகா[2] (*Baraca*) என்ற குடாவை யுண்டாக்குகிறது. இதற்குள் ஏழு தீவுகளிருக்கின்றன. அந்தக் குடாவுக்கு வரும் கப்பல்களை நேரே உள்ளே கொண்டு வராமல்[3] வெகு தூரத்தில் நிறுத்தி நங்கூரம் பாய்ச்சுவார்கள்; அப்படியின் றிக் குடாவுக்குட் சென்றவர்கள் இறந்தவர்களேயாவர்; அதற்குக் காரணம் அங்கே கடல் கொந்தளிப்பாகவும், அலைகள் கடுமையாகவும், இருப்பதோடு கடலில் கீழ் நீரோட் டமும் சுழிப்பும் அதிகம். கடலின் அடிப்பாகம் சில இடங் களில் ஆழமாகவும், சில இடங்களில் குன்றுகள் முளைத்த தாகவுமிருப்பதால், நங்கூரம் பாய்ச்சினால் சில இடங்களில் நங்கூரம் பிடிபடுவதில்லை; சில இடங்களில் நங்கூரக் கயிறு அறுந்துபோயும் சில விடங்களில் ஆடிக்கொண்டும் இருக் கின்றன; கடற் பிரயாணஞ் செய்பவர்கள் இந்த நாட்டை அறிந்து கொள்ளும்படியாகப் பெரியவையும் கருமைநிற முள்ளவையுமான பாம்புகள் தென்படுகின்றன; இந்தக்கரை

40. (1) எயிரினேன்: ராண் ஆப் கட்ச் என்று பெயர்.

(2) பராகா: கட்ச் வளைகுடா.

(3) இந்த இடத்தைப் படத்தில் பார்த்தாலும் இதன் நிலைமை தெரியவரும.

(4) பருகச்சா என்று சொல்லப்படும் தற்கால புரோச் (Broach.) நகர்

யிலும் பரிகஸாவைச்[4] சுற்றியுமுள்ள இடங்களில் காணப் படும் பாம்புகள் பளபளப்புள்ள பச்சை நிறத்தோடு பொன் னிற முடையனவாய்ச் சிறியனவாகக் காணப்படுகின்றன.

41. பராகா குடாவுக்கப்பால் பாரிகஸாவும் ஆரிய[1] நாட்டுக் கடற்கரையும் இருக்கின்றன; இதுதான் இந்தி யாவுக்கும் நாம்பனஸ்[2] (*Nambanus*) நாட்டுக்கும் ஆரம் பமாகுமிடம்.[3] ஸிந்தியாவுக்கு அணிமையிலும் உள்நாட்டி லும் இருக்கும் நாட்டை அபிரியா[4] (*Abiria*) வென்பாரயி னும் கடற்கரைப் பக்கத்தை ஸிரஸ்டிரனி[5] (*Syrastrene*) என்பர். கோதுமை, அரிசி, எண்ணெய், நெய், முரட்டுத் துணிகள் செய்யப்படுகின்ற பருத்தி இவை உண்டாகின்ற செழிப்புள்ள நாடு[6] இது. இங்கே பல மாட்டுக் கிடைகள் வளர்க்கப்படுகின்றன; மக்களும் நீண்டு கறுத்திருப்பர்.

---

41. (1) ஆரியகம் என்பது மூலஎட்டில் விளக்கமாகச் சொல் லப்படவில்லை. சிலர் லடிகா (Latica) என்றும் லரிகா (Larica) என்றும் ராஸ்டிகா என்றும் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆனால் தமி ழகத்துக்கு எதிராக ஆரியகம் என்பது வடபுற முள்ளதென்பது கவனிக்கத்தக்கது.

(2) நாம்பனஸ்: மூல ஏட்டில் மம்பரஸ் என்று இருக்கிறது. அக்கால நிலையை நோக்கச் சகவமிசத்து நகபாணன் ஆண்டிருப்பா னென்று தோன்றுகிறது. இவன் மஹேந்திர சாதகர்ணியாக இருக் கலாமென்பது ஜேயஸ்வால் எண்ணம். J. B. O. R. S. 16-279.

(3) இந்தியா. விந்தியத்துக்கு வடக்கே மத்திய ஆசியாவிலி ருந்து பலர் படையெடுத்து வந்து ஆளவும் தெற்கே ஆந்திர சோழ பாண்டியர் ஆளவும் நடுவிலுள்ள நாடு க்ஷாத்திரப்பர் வசமாயிற் றென்பர் சரிதக்காரர்.

(4) அபிரியா வென்றதேசம் பைபிள் என்ற விவிலிய நூலில் கூறப்படும் ஓபிர் (Ophir) என்பர்.

(5) ஸிரஸ்டிரனி: சௌராஷ்டிரம். தற்காலக் கத்தியவார் தீபகற்பம்.

(6) செழிப்புள்ள நாடு: இங்கே குறிப்பிட்ட நாடு கூர்ஜர நாடு. அதன் செழுமை உலகறிந்ததே.

இத் தேசத்தின் தலைமைப் பட்டினம் மின்னகரம்[7] எனப் பேர் பெறும்; இங்கிருந்து பருத்தி அதிகமாகப் பரிகஸா வுக்குக் கொண்டுவரப்படுகிறது. இவ்விடங்களில் அலெக் ஸாந்தர் படையெடுப்பின் அறிகுறிகளாகப் பழங்கோயில் கோட்டை மதில்களும், கிணறுகளும் காணப்படுகின்றன. பர்பரிகத்திலிருந்து பரிகஸாவுக்கு எதிரிலும் அஸ்தசம்ப்ரா வுக்கு (*Astacampra*) முன்னுமுள்ள பப்பிகா[8] (*Papica*) முனைக்கு நாவாய் ஓட்டுவழி மூவாயிரம் ஸ்டேடியா அள வாகும்.

42. இதற்கடுத்தாற்போல் வடபுறமாகச் செல்லும் கழி யொன்றுண்டு[1]. இது கடலலையால் அலைக்கப்படுகிறது. இதன் முகத்துவாரத்தில் பயோனஸ்[2] (*Baeones*) என்ற தீவு இருக்கிறது; அதன் நடுவில் மெயிஸ்[3] (*Mais*) என்ற ஆறு ஓடுகிறது. பரிகஸா செல்பவர்கள் முந்நூறு ஸ்டே டியா அகலமுள்ள இந்தக் குடாவைத் தாண்டும்போது கீழ்ப்புறமாகத் தெரியும். இந்தத் தீவை இடது பக்கமாக வைத்து நேர் குறுக்காக பரிகஸாவிருக்கும் ஆற்று வாய்க்குச் செல்வர். இதற்கு நம்மதஸ்[4] (*Nammadus*) என்று பேர்.

43. இந்தக்குடா குறுகியதாயிருப்பதால் சமுத்திரத் திலிருந்து பரிகஸாவிற்குச் செல்வதற்கு வருங் கப்பல்கள்

---

(7) **மின்னகரம்** : இது இந்தூராக விருக்கலா மென்பது சிலர் அபிப்பிராயம்.

(8) **பப்பிகா** : கோபிநாத முனை.

42. (1) **கழி** : காம்பே குடா.

(2) **பயோனஸ்** : நருமதை முகத்துவாரத்துக்கு எதிரிலுள்ள பிராம் தீவு.

(3) **மெயிஸ்** : மாஹிநதி.

(4) **நம்மதஸ்** : நருமதை யாறு.

துன்பப்படுகின்றன; வலதுபுறவழியும் இடதுபுற வழியும் அவ்விதமே சங்கடமுடையதாக விருப்பினும் இடது புறமாக நல்ல வழி யொன்று உண்டு. குடாவின் வலது பக்கம் வழியின் தொடக்கத்தில் நீண்டு குறுகிய மணல் திட்டொன்று உண்டு; அது குன்றுகள் நிரம்பியது; கம்மனி (*Commoni*) என்ற கிராமத்தை நோக்கியிருக்கிறது; ஹிரோனி (*Herone*) என்று பேர் பெறும். இதற்கு எதிரிலும் அஸ்தசம்பராவுக்கு (*Astacampra*) முன்னும் பப்பிக்கா என்ற முனை நீளுகிறது; இவ்விடத்தில் நீரோட்டம் வேகமுள்ளது; கடலின் அடியிலுள்ள மலையும் கரடும் முரடுமாக விருப்பதனாலே நங்கூரம் பாய்ச்சினால் நிலைநிற்பதில்லையாதலால் அது நல்ல துறைமுகமன்று. அந்தக் குடாவிலே ஆபத்தின்றி நுழைந்தாலும் பரிகசாவிலிருக்கும் ஆற்றுமுகத்தைக் காண்பது அரிது; அதன் கரை மிகத் தாழ்ந்திருப்பதால் அவ்விடம் செல்லும்வரை ஊர் கண்ணுக்குப் புலப்படுவதில்லை. அப்படிக் கண்டு கொண்டாலும் ஆற்றுவாயில் காணும் மணற்றிட்டுகளால் அங்கே செல்வது மிகத் துர்லபம்.

44. இவ்வாறு இருப்பதால் 'திரப்பகா' (*Trappaga*) சோதிம்பா[1] (*Cotymba*) என்ற படகு வகைகளில் மாலுமிகளோடு நிறைந்திருக்கும் அரசாங்கச் செம்படவர்கள் சௌராஷ்டிரம் வரை கரையோரமாகச் சென்று கடலில் வரும் மரக்கலங்களைப் பரிகசாவுக்கு அழைத்துச் செல்கின்றனர். அவர்கள் (செம்படவர்கள்) குடாவின் தலைப்பிலிருந்து கப்பல்களை மாலுமிகளோடு மணற்றிட்டுக்கு நடுவில் (சேதமின்றி) அழைத்துச் செல்லுகின்றனர். வெள்

---

44. (1) திரப்பகா, சோதிம்பா என்பவை அந்நாளிலிருந்த படகு வகைகள்.

ளத்[illegible] சென்றும் வற்றத்தில் பள்ளங்களிற்றங்கியுமிருந்து குறித்த[illegible]ங்களுக்கு மரக்கலங்களைச் செலுத்துகின்றனர். இந்தப் பள்ள நீர்நிலைகள் பாரிகசா வரையில் ஆழமான இடங்கள்; அது (பாரிகசா) முகத்துவாரத்திலிருந்து முந்நூறு ஸ்டேடியா அளவில் ஆற்றங்கரையில் இருக்கிறது.

45. இனி, இந்தியா தேச முழுவதும் பல ஆறுகள் ஓடுகின்றன; அவற்றில் வெள்ளமும் வற்றமும் அதிகம்; அமாவாசை பௌர்ணமியில் மூன்று நாள் வரை ஏற்றமாயும் பிற்பாடு திங்கள் பாடுசாயும்போது வரவரக் குறைந்தும் வரும். பாரிகசா பக்கத்தில் இது பின்னும் அதிகம்; அதனால் (அவ்விடங்களில்) தரை திடீரெனக் காணப்படுவதும், தரையாயிருந்தவிடம் கடலாவதும், சற்று முன் மரக்கலங்கள் சென்ற பாகம் நீர்வற்றி வெறுந்தரையாவது மியற்கை. ஆற்றிலும் கடல் வெள்ள ஏற்றத்தால் ஆற்று வேகம் குறையக் கடல்வெள்ளம் எதிர்த்து உள்ளே வெகு தூரம் செல்லும்.

46. இந்தக் காரணத்தாலே பழக்க மற்றவர்களுக்கும் முதன் முதல் வியாபாரத்திற்கு வருபவர்கட்கும் மரக்கலங்கள் கொண்டுவருவதும் போவதும் கஷ்டமாகின்றன. வெள்ளத்தில் ஓட்ட வேகம் தாங்கமுடியாது; நங்கூரம் தாங்க முடியாது; நங்கூரம் பாய்ச்சினாலும் அது நிலை பெறாது; அதனால் பெரிய மரக்கலங்கள் அதன் வேகத்திலகப்பட்டுத் திரும்பி மணற்றிட்டில் அடிபட்டு உடைகின்றன; சிறு கப்பல்கள் தலைகவிழ்கின்றன; வற்றத்தில் பக்கங்களிலுள்ள கால்களில் ஒதுங்கிச் சாய்ந்த கலங்களை நேரே நிமிர்த்திவைக்காவிட்டால் வேகமாக உட்செல்லும் வெள்ளத்தினால் கப்பல் நிறைந்து விடும். குறிப்பாக

அமாவாசையின் இரவில் வெள்ள ஓட்டம் மிகையாக இருக்கிறது ; அப்பொழுது கடல் ஓத்து[illegible]ற்பதாக நினைத்து ஒருவன் முகத்துவாரத்தில் நுழைய ஆரம்பித்தால் அதிக தூரத்திலிருந்துவரும் ஒரு சேனையின் இரைச்சலைப்போல் அவன் காதிற்படும் ; உடனே கடல்நீர் பேரிரைச்சலோடு மணற்றிட்டையெல்லாம் மூடிக்கொண்டு ஓடும்.

47. பாரிகசாவுக்கு அப்பால் உள்நாட்டிலுள்ள தேசத்தில் அரத்தியை[1] (*Arattii*), அரக்கோஷியை[2] (*Arachosii*), காந்தாரை[3] (*Gandaroei*), புக்கேபாலஸ் அலெக்ஸாந்திரியா[4] (*Bucephalus Alexandria*) என்னும் ஊர் அடங்கிய பொக்கலை[5] (*Poclais*) என்றபலநாட்டுச்சாதியினர்வாழ்கின்றனர். இவர்களுக்கப்பால் பாக்திரியரென்னும் போரிடும் சாதியினர் இருக்கின்றனர் ; அவர்கள் தங்கள் அரசரின்கீழ் வாழ்கின்றனர். அலெக்ஸாந்தர்[6] இவ்விடங்

---

47. (1) அரத்தியை : அராஷ்டி என்பதன் பாகதச் சொல். இது பஞ்சாபியரைக் குறிக்கும்.

(2) அரக்கோஷியை : ஆப்கானிஸ்தானத்திலுள்ள கந்தகார் நாட்டிலுள்ள சனங்கள்.

(3) காந்தாரை : காந்தார தேசத்திலுள்ளவர். காந்தாரம் என்பது காச்மீரத்துக்குப் பக்கத்திலுள்ளது.

(4) புக்கேபாலஸ் : இஃது இப்பொழுது ஜீலம் என வழங்குகிறது.

(5) பொக்கலை : புஷ்களாவதி யென்பதன் பாகதம். இது காந்தார நாட்டின் மேல்பாகத்திலுள்ளது.

(6) அலெக்ஸாந்தர் : இவன் கிரேக்க அரசன். இந்தியாவின் மேல் படையெடுத்து வந்தபோது இவன் சந்திரகுப்த மௌரியனால் தோற்கடிக்கப் பட்டுத் திரும்பினான் என்பது சரித்திரம். ஆனால் மீனண்டர் என்பதைத் தவறாய் அலெக்ஸாந்தர் என்று எழுதிவிட்டதாகக் கருதுவர் ஷாப் ஆசிரியர்.

களிலிருந்து புறப்பட்டுத் தமிழகத்தையும் இந்தியாவின் தென் பாகத்தையும்[7] நீக்கிவிட்டுக் கங்கை நாட்டில் நுழைந்தான்; இன்றும் பாரிகசாவில் கிரேக்க நாட்டை அலெக்ஸாந்தருக்குப் பின்னாண்ட அபலோதோத்தஸ்[8] (*Apolodotus*) மீனாண்டர்[9] (*Menander*) இவர்களின் உருவங்களும் கிரேக்க எழுத்துக்களுமுடைய பழய டிராமி[10] நாணயமாகச் செலாவணியாகிறது.

48. இந்த இடத்திலிருந்து உள் நாட்டில் முற்காலத்தில் இராஜதானியாகவிருந்த உசேனி[1] (*Ozene*) நகரமிருக்கிறது; இவ்விடத்திலிருந்து பாரிகசாவைச் சுற்றியுள்ள நாட்டுக்கு வேண்டிய பண்டங்களும், நம்முடைய வியாபாரத்திற்குரிய அகேட்,[2] கார்னேலியன்,[2] இந்திய மஸ்லீன், சாயத்துணி, நாட்டுத் துணி முதலிய பண்டங்களும் கொண்டு வரப்படுகின்றன. இந்நாட்டு வழியாகவும் வடநாட்டிலிருந்து பொக்களே நாடு வழியாகவும் சடாமாஞ்சியும் கஸ்பபிரணி,[3] பரோபணிஸினி,[4] கபோலிதி[5] இவற்றின்

---

(7) தென்பாகம்: தக்ஷிணம், மரா்டம் முதலிய தேசங்கள்.

(8), (9) அபலோதோதஸூம் மீனண்டரும்: உரோமாபுரியிலரசாண்ட அரசர்.

(10) டிராமி யென்பது உரோம நாணயம்.

48. (1) உசேனி: மாளவ தேசத்தின் தலைநகரான உச்சயினி பட்டினம்.

(2) அகேட், கர்னேலியன்: இரத்தினக்கற்கள் வகை.

(3) கஸ்பபிரணி: (Caspapyreni.) காசிபபுரம் என்பதன் திரிபு; காச்மீர தேசம்.

(4) பரோபணிஸினி: (Paropanisene.) இதுபொழுது இந்துகுஷ் மலைத்தொடரென்று வழங்குகிறது.

(5) கபோலிதி: (Cabolite.) காபூல் தேசமான ஆப்கானிஸ்தானம்.

பக்கத்திலுள்ள ஸித்தியா நாட்டின் வழியாகவும் கோட்டமும் குங்கிலியமும் கொண்டு வரப்படுகின்றன.

49. இந்தப் பட்டினத்துச் சந்தைக்குச் சாராயம், செம்பு, ஈயம், நாகம், காரீயம், பவளம், கோமேதகம், மெல்லிய துணி, மற்றும் பலவித முரட்டுத்துணிகள், ஒரு முழ அளவுள்ள பளபளப்பான கச்சை, வாசனைக் கிராம்பு, கண்ணாடி, மனோசிலை[1] கருநிமிளை,[2] நெரியாசம்,[3] பொன் வெள்ளி நாணயங்கள், சிறிது அதிக விலை பெறாத சாந்துக் குழம்புகள் இறக்குமதியாகின்றன. இத்தாலியிலிருந்து வரும் சாராயத்தை விருப்பமாகவும், லவோதிசி, அரபியாவிலிருந்து வருவதைச் சாதாரணமாகவும் கொள்ளுவர். நாணயங்களைக் கொண்டு வந்து இங்கே மாற்றும்போது ஊதிய முண்டு.[4] அரசனுக்காக அதிக விலையுள்ள வெள்ளிப் பாத்திரங்கள், பாடும் பையன்கள், அந்தப்புரத்துக்கு அழகுள்ள ஸ்திரீகள்,[5] நேர்த்தியான சாராயம், நேர்த்தியும்

---

49. (1) மனோசிலை: முன்னாளில் பாரசீகத்திலிருந்து வந்தது; இப்பொழுது பர்மா, சீனா முதலியவிடங்களில் அகப்படுகிறது.

(2) கருநிமிளை: (Antimony) இதனை வெள்ளைச் செம்பென் என்றுஞ் சொல்லுவர். இது முன்னாளில் கண்ணுக்கு மை செய்ய உபயோகப்பட்டு வந்தது. எகிப்து தேசத்தில் பென்னிஹாஸானிலுள்ள க்னும்ஹோட்டெ சமாதிக் கல்வெட்டில் (கி. மு. 1900) இது பாலைவனத்திலுள்ள ஆசியர்களால் கொண்டுவரப்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

(3) நெரியாசம்: தூபவகை; 12-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுக்களில் கூட காணப்படுகின்றன.

(4) நாணயங்கள்: உரோம கிரேக்க நாணயங்கள் கலப்பற்றவையானதால் விலை அதிகம்.

(5) ஸ்திரீகள்: இந்திய அரசர்களது அந்தப்புரத்திற்கு யவனச் சிறுமியர் ஏவலாளராய் அமர்ந்திருந்ததாகப் பத்துப் பாட்டில் காணப்படுகிறது.

அழகுமுள்ள ஆடைகள், மேலான சாந்துக் கலவைகள் கொண்டுவரப்படுகின்றன. இங்கிருந்து சடாமாஞ்சி, கோட்டம், குக்கில், தந்தம், அகேட், கர்னேலியன் கற்கள், லிஸியம்,[6] பலவிதப் பருத்தியாடைகள், பட்டாடை, சாயத்துணி, நூல், திப்பிலி[7] மற்றும் பலவிடங்களிலிருந்து வரும் பண்டங்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. எகிப்திலிருந்து இந்தப் பட்டணத்திற்கு வருபவர்கள் எபிபி (*Epiphi*) யென்ற ஜூலை மாதத்தில் வருகின்றனர்.

50. பாரிகசாவுக்கப்பால் கடற்கரை வடக்கிலிருந்து நேர் தெற்கே யோடுகிறது; அதனால் இந்தப் பாகத்திற்குத் தட்சிணபாதம்[1] என்று பெயர்; நாட்டு மொழியில் தக்கிணே என்ற சொல்லுக்கு தெற்கு என்று பொருள். இந்தக் கடற்கரைக்குக் கிழக்கிலுள்ள தேசம் வனாந்தரங்களும்[2] மலைகளும் நிறைந்தது. அவ்விடங்களில் பலவிதமான காட்டு மிருகங்கள், சிறுத்தை, வேங்கை, யானை, பெரும்பாம்புகள், கழுதைப்புலி, பலவிதக்குரங்குகள் வாழ்கின்றன. பலவித ஜனங்கள் நெருங்கிக் கங்கை நாடு[3] வரை வாழ்கின்றனர்.

51. தெட்சிண பாதத்திலுள்ள அங்காடிப் பட்டினங்களில் இரண்டு முக்கியமானவை. பாரிகசாவிலிருந்து

---

(6) லிஸியம்: 39 (4)ன் குறிப்புப் பார்க்க.

(7) திப்பிலி: வடமொழியில் பிப்பலி என்று பெயர். இது கிழக்குத் தொடர்ச்சிமலை, சிம்மளம், வங்கம் முதலான விடங்களில் உண்டாகின்றது.

50. (1) தட்சிணபாதம்: ஆங்கிலத்தில் டெக்கான் என்பர்; விந்திய மலைக்குத் தெற்கிலுள்ள பிரதேசம்.

(2) காடுகள்: தண்டகாரணியம் போலும்.

(3) கங்கைநாடு: கங்கையாறு ஓடும் பிரதேசத்தைப் பெரிபுளூசில் கங்கைநாடென்றே சொல்லப்பட்டிருக்கிறது.

தெற்கே இருபது நாள் பயணமுள்ள பைதாஞு[1] இருக்கிறது; இதற்கப்பால் பத்து நாள் பயணத்தில் தகரா[2] என்ற பெரியபட்டண மிருக்கிறது. இப்பட்டணங்களிலிருந்து பாரிகசாவுக்கு நல்ல பாதையில்லை யெனினும் பண்டங்கள் வண்டியில் கொண்டுவரப்படுகின்றன; பைதாணிலிருந்து அதிகமாகக் கர்னேலியனும், தகராவிலிருந்து சாதாரணத் துணி, மஸ்லீன், துப்பட்டி, கடற்கரையிலிருந்து உள்நாட்டு வழியாகக் கொண்டுவரப்படும் பண்டங்கள் முதலியனவும் வருகின்றன. தமிழகம் முடியக் கடற்கரையோரம் ஏழாயிரம் ஸ்டேடியா தொலைவுள்ளது. ஆனால் கடற்கரை நாடு பின்னும் அதிக தூரம்.

52. பாரிகசாவுக்கு அப்பால்[1] வரிசையாக இருக்கும் அங்காடிப் பட்டினங்களாவன; சுப்பரா,[2] மூத்த சரகனஸ்[3] (*Saraganus*) இருக்கும் நாளில் சட்டப்படி யமைந்த கல்

---

51. (1) பைதான் : (Paethana) ; பிரதிஸ்தாணமென்னும் தற்காலப் பைதான் ; கோதாவரி நதி உற்பத்தியாகு மிடத்துக்கு கருகிலிருக்கிறது.

(2) தகரா : (Tagara) ; இது இப்பொழுது தேர் (Ter) என்று வழங்குகிறது; பைதானுக்குத் தென்கிழக்கில் 95 கட்டை தொலைவிலுள்ளது.

52. (1) அப்பால் :—தெற்கில்.

(2) சுப்பரா: (Suppara): பம்பாய்க்கு அருகில் வடபக்கமாயுள்ளது ; சோபாரா என வழங்கும்.

(3) மூத்தசரகானஸ் : சதகர்னி I என்பதன் திரிபு. இவன் கௌதமிபுத்திரசதகர்ணியவான். கி.மு. 58-ல் நகபாணனிடமிருந்து பம்பாயிலிருந்து காநூய வாட்வரை பிடித்துக்கொண்டவன் இரண்டாவது சாதகன்னியென்பவன் விஷமசீலி சாதகர்ணியாக வேண்டும். இவன் சுகர்தனுக்கு முன் அரசாண்டவன். J. B. O. R. S. XVIII.

லியாண நகரம்[4] சந்தாஸ்[5] (*Sandares*) ஆட்சியின் கீழ் வந்த பிறகு இத்துறைமுகத்தில் வியாபாரம் துன்பமாயிருப்பதோடு அவ்விடம் சாக்கிறக்கும் கிரேக்க மரக்கலங்கள் காவலோடு[6] பாரிகசாவுக்குக் கொண்டுபோகவும்படுதல் கூடும்.

53. இந்தப் பிரதேசத்தில் கல்லியாணுவுக்கப்பால் பல பட்டினங்களிருக்கின்றன; செமில்லா[1], மண்டகோரா,[2] பழைய[3] பட்டினே, மெழிசிக்கரை,[4] பைசாண்டி

---

(4) கல்லியாண நகரம் : இப்பொழுது கல்யாணி யென்று வழங்கும் ஊர்.

(5) சந்தரஸ் : பாகவத புராணத்திற் காணப்படும் சுகந்தன் என்பது மரூஉ. இதன் பாகதம் சுனதனன் என்பது.

(6) காவல் : இந்தப் பாகம் சகக்ஷத்ரிணர் வசமிருந்ததால் தங்களுக்கு இறையிறுக்கும் பொருட்டு மரக்கலங்களைச் சிறைபிடித்துச் செல்லுவர்.

53 (1) செமில்லா : (Semylla) பம்பாய்க்கு 25 கட்டை தெற்கிலுள்ள செனல் என்ற ஊர்; முற்காலத்தில் இதற்குச் சம்ரவதி யென்று பெயர்.

(2) மண்டகோரா : (Mandagora) சாவித்திரி நதி முகத்துவாரத்திலிருக்கும் பாங்காட் (Bankot) என்ற ஊர் ; இது தாலமி கூறும் மந்தரகிரியோ வென்பது யோசிக்கதக்கது. நற்றிணை 395-ல் கூறப்பட்ட மாந்தையோ வென்பர் K. N. S. (118)

(3) பழையபட்னே : (Palaepatnae); இதுபொழுது டபோல் (Dabhol) என்று வழங்குகிறது.

(4) மெழிசிக்கரை : இது ராஜபூராயிருக்கலாம். இதனைப் பிளினி சிகருஸ் (Sigerus) என்பர்: பதிற்றுப்பத்தில் கிரேக்க (யவண) ரிருக்கை ஒன்று இருந்ததாகவும் அதனைச் சேரனொருவன் அழித்து யவனர்களையும் அவமானபடுத்தினதாகவும் காணப்படுகிறது. கடலில்வரும் கப்பல்களைக் கொள்ளைக்காரர் மிகுதியும் துன்புறுத்தி வந்தனரென்பது 'கடற்கடம் பெறிந்து' என்றும் 'கடல்

யப்[5] தோகரம்[6] ஒருண போவஸ்,[7] செர்ஸிநோஸஸ் (*Chersenosus*)[11] என்ற விடத்திற்கு எதிரிலுள்ள ஸெஸிகிரிணி[8] (*Sesecraenae*), ஐகிடியை [9] (*Aegidii*), கப்பற் கொள்ளைக் காரர் நிறைந்த கனிட்டியை[10] (*Caenitae*) என்ற தீவுகளும், பின்னால் வெள்ளைத் தீவு[12] மிருக்கின்றன. பிற்பாடு நௌரா[13] (*Naura*), திண்டிஸ்[14] (*Tyndis*) என்ற தமிழகத்தின்

பிறக்கோட்டிய வெல்கெழு குட்டுவன்' என்றும் வரும் பதிற்றுப் பத்து அடிகளால் வலியுறும்.

(5) பைசாண்டியம் : (Bysantium) இது கிரேக்க ஊர்; கிரேக்கர்கள் குடியேறியதால் இப்பெயர் பெற்றது ; தற்போது விஜயதுர்க்கம் (Vijayadorg) என்று பேர்பேறும்.

(6) தோகரம் (Togarum); இதுபொழுதுதேவகிரி (Devgarh) யென்று வழங்குகிறது.

(7) ஒருண போவஸ் (Aurannoboas); மால்வான் என்ற ஊர்: இங்கே சிவாஜியின் ஞாபகக்கல் நாட்டப்பட்டிருக்கிறது.

(8) ஸெஸிகிரிணி : வெங்குர்லா தீவுகள்.

(9) ஐகிடியை : கோவா தீவு

(10) கனிட்டியை. கார்வாருக்கு எதிரிலுள்ள தீவுகள்.

(11) சேர்ஸிநோஸஸ் : என்ற கிரேக்க மொழிக்குத் தீபகற்பம் என்று பொருள். கார்வார் என்ற ஊர் முன்னே கடலில் நீண்டிருப்பது இவ்வாறு கொள்ள நேர்ந்தது போலும்.

(12) வெள்ளைத்தீவு இது பொழுது பறவைத்தீவு என்றும் நித்ரான் (Nitran) என்றும் வழங்குகிறது. கரையிலிருந்து 10 கட்டை தொலைவிலிருக்கிறது.

(13) நௌரா : இது நறவு என்ற பழைய ஊர். குடா நறவின் நாண்மகிழிருக்கை என்பது பதிற்றுப்பத்து, 85; குடக்கோ இளஞ் சேறல் இரும்பொறையின் தலைநகர் : மங்களூர் என்பர் யூல் ஆசிரியர். இது உண்மையே. இது நேத்ரவதியாற்றின் முகத்தில் இருக்கின்றது. இதனைக் கண்ணனூர் என்பர் ஷாப்.

(14) திண்டிஸ்: தொண்டி ; இதுபொழுது கடலுண்டி யென வழங்கும்.

முதல் அங்காடிப்பட்டினங்களிருக்கின்றன. பின்னர் முசிரி[15] நெல்கிந்தா [16] (*Nelcynda*) என்றவை இருக்கின்றன. இவை இதுபொழுது முக்கியமாக விருக்கும் பட்டினங்கள்.

54. திண்டிஸ் சேரபுத்திர நாட்டு[1] ஊர்; கடலி லிருந்து பார்க்கும்போது தெரியும் கிராமம். அந்த நாட்டி லுள்ள முசிரி யென்ற ஊரில் அரேபியாவிலிருந்தும் கிரேக்க தேசத்திலிருந்தும் வரும் மரக்கலங்கள் நிறை கின்றன. அது ஆற்றோரமிருக்கிறது; இந்த ஊர் திண்டிவிலி லிருந்து ஆறுவழியாகவும், கடல்வழியாகவும், ஐந்நூறு ஸ்டேடியா தொலைவு உள்நாட்டிலும், கடற்கரையிலிருந்து ஆற்றோரமாக இருபது ஸ்டேடியா தூரத்திலும் இருக் கிறது. முசிரியிலிருந்து நெல்கிந்தா ஆறு வழியாகவும் கடல் வழியாகவும் ஐந்நூறு ஸ்டேடியா தொலைவு. அது பாண்டி நாட்டிலிருக்கிறது. இந்தப் பட்டினமும் கடற் கரையிலிருந்து நூற்றிருபது ஸ்டேடியா தூரத்தில் உள் நாட்டிலிருக்கிறது.

55. இந்த ஆற்றின் முகத்துவாரத்தில் பக்கரை[1] (*Bacare*) என்ற ஊர் இருக்கிறது; இந்த இடத்திற்கு நெல்கிந்தாவிலிருந்து மரக்கலங்கள் ஊர் திரும்பும்போது வந்து கடலில் நங்கூரம் பாய்ச்சிப் பண்டங்களை யேற்று கின்றன; (இவ்வாறு செய்வது) அந்த ஆற்றில் மணற்றிட்டு

---

(15) முசிரி: முசிரிப் பெருந்துறை பெரியாற்றின் கரையிலி ருந்தது; அக நானூறு 148 பார்க்க.

(16) நெல்கிந்தா: இப்பொழுது இது வென நிச்சயிக்க முடிய வில்லை.

54. (1) சேரபுத்திரநாடு: (Cerobothra); சேரநாடு.

55. (1) பக்கரை: வைக்கரை: இது கோட்டயத்திற் கருகி லுள்ள தோரூர்; (The Tamils 1800 years ago, p. 60.)

களிருப்பதாலும் கால்கள் உருத்தெரியாம லிருப்பதாலுந் தான். இந்த இரண்டு பட்டினங்களுக்கும் உரிய அரசர் உள் நாட்டில் வசிக்கின்றனர். கடலில் வருபவர்களுக்கு அடையாளமாக அவர்களை வரவேற்பதுபோல் கருநிறமும் குட்டையுமான பாம்புகள் காணப்படுகின்றன; அவற்றின் கண்கள் சிவப்பாயிருக்கின்றன.

56. இவ்விடங்களில் மிளகும்[1] பச்சிலையும்[2] ஏராள மாகக் கிடைப்பதால் அவர்கள் இந்த அங்காடிப் பட்டினங் களுக்குப் பல பெருங் கப்பல்களை யனுப்புகின்றனர். முதலாவதாக அதிக நாணயம் வருகிறது; சிறிது நீலக்கல், மெல்லிய ஆடை, சித்திர ஆடை, கருநிமிளை, பவளம், வேலைசெய்யப்படாத கண்ணாடி, செம்பு, ஈயம், நாகம் பாரிகசாவில் இறக்கப்படும் அளவு சிறிது சாராயம், மனோ சிலை, அரிதாரம் என்பனவும், அந்த நாட்டார் கோதுமை வியாபாரஞ் செய்யாததால் மாலுமிகளுக்கு வேண்டிய

56. (1) மிளகு: வெகு காலமாக மலையாளக் கரையிலிருந்து தான் ஐரோப்பிய நாட்டுக்கு ஏற்றுமதியாயிற்று.

(2) பச்சிலை: இதனை யவன பாஷையில் மலபத்திரம் (Malabathrum) என்பர். இதனைப் பலர் பலவிதமாகக் கூறுவர். இது முற்காலத்தில் சீயம் அன்னும் தேசங்களில் பயிர் செய்யப் பட்ட ஒரு சிறு செடி. இலை காரமுடையது. செடிகள் முட்கள் நிறைந்தன. இதனை நட்ட ஐந்து ஆறு மாதங்களில் அறுவடை செய்வர். இலையை வெயிலில் உலர்த்தினவுடன் ஒருவித நறுமணம் கமழ்கிறது என்று சீன கிரந்தங்களில் காணப்படுவதாக ஐரோப்பிய விற்பன்னரொருவர் எழுதியுள்ளார். (J. A 1918 ii.) தமிழ் நூல் களில் 'நேர்கட்டி செந்தேன் நிரியாசம் பச்சிலை—யாரமகி லுறுப் போடாறு' என்றும், அஞ்சனக் கட்டி நெரியாசம் பச்சிலை யாரமகி லுறுப்போ ரைந்து' என்றும் காணப்படுகிறது. இதற்குத் தமால மென்றும் ஒரு பெயருண்டு. தமாலபத்திர மென்பது மலபத்திர மாயிற்றுப் போலும்

அளவு கோதுமையும் இறக்குமதியாகின்றன. இங்கிருந்து கொட்டநரா[3] (*Cottonara*) பிரதேசத்தில் விளையும் மிளகு மாத்திரம் ஏற்றப்படுகிறது. இது தவிர, நல்ல நேர்த்தியான முத்து, தந்தம், பட்டாடை, கங்கை நாட்டிலிருந்து வரும் சடாமாஞ்சி, உள்நாட்டிலிருந்து பச்சிலை, கிரிஸே தீவிலும்[4](*Chryse*) தமிழகக் கடற்கரைகளிலும் உண்டாகும் ஒளிப்புள்ள கற்கள், மாணிக்கம், நீலம், ஆமையோடு உள்ளிட்ட பலவகைப்பட்ட இரத்தினக் கற்கள் ஏற்றப்படுகின்றன. இவ்விடங்களுக்கு எகிப்திலிருந்து ஜூலை மாதத்தில் புறப்பட்டுப் பருவகாலத்தில் பிரயாணஞ் செய்கிறார்கள்.

57. முற்கூறியபடியுள்ள யாத்திரை முழுவதும் காணு, (*Cana*) யூதமோன் அரேபியாவிலிருந்து (*Eudaemon Arabia*) சிறு கலங்களில் கரையோரமாகச் செய்வது வழக்கம்; துறைமுகங்களின் இருப்பிடத்தையும் கடல் நிலைமையையும் நன்கு கவனித்துச் சமுத்திரத்தின் குறுக்கே முதன் முதலாகப் பிரயாணஞ் செய்தவர் ஹிப்பலஸ் (*Hippalus*) என்பவர். நமக்கு எல்லியன் காற்று அடிக்குங்காலத்தில் இந்தியாவில் கடலிலிருந்து பருவக் காற்று ஆரம்பித்து அடிக்கிறது; சமுத்திரத்தின் குறுக்கே இந்தக் காற்றில் அதற்குச் செல்லும் வழியைக் கண்டு பிடித்தவரின் பேரான ஹிப்பலஸ் என்றதையே இக்காற்றுக்கும் இட்டு அழைக்கின்றனர். அதுமுதல் இதுவரையில் கப்பல்கள் காணுவிலிருந்தும் லவங்கத் தீவுகளிலிருந்தும் நேரே செல்லுகின்றன; தமிழகத்திற்குச் செல்லு

---

(3) கொட்டநரா: குட்ட நாடு.

(4) கிரிஸே தீவு: சுவர்ண பூமி எனப்படும் சுமத்ரா சாவகத் தீவு.

கின்ற மரக்கலங்கள் காற்றுக்கு அப்புறமாகச் செல்லுகின்றன; பாரிகசாவுக்கும் சித்தியாவுக்கும் செல்லும் கப்பல்கள் மூன்று நாட் பயணம் கடற்கரை யோரமாகச் சென்று அங்கிருந்து தகுதியான பருவக்காற்றில் கரையைவிட்டும் குடாக்களை நீக்கியும் சமுத்திரத்தின் குறுக்கே செல்லுகின்றன.

58.[1] வைக்கரைக்கு அப்பால் கருஞ்சிவப்பு மலையும்[2]

---

58. (1) உவில்லியம் வின்சேண்டு என்பார் பின்வருமாறு மொழி பெயர்த்துள்ளார்:—"இழவக்கரை அல்லது செம்மலையைக் கடந்தவுடன் எதிர்ப்படும் நாடு பாண்டிய அரசாட்சிக்குட்பட்டது; அது பரளியா வென்றழைக்கப்படும். நேர் தெற்கு வடக்காயுள்ளது. முத்துச் சலாபங் குளிக்கும் கொற்கை வரையிற் செல்லுகிறது. கொற்கை பாண்டிய அரசாட்சிக்குட்பட்டது. ஆனால் செம்மலையை விட்டவுடன் முதலிற் காணப்படும் துறைமுகம் பலிதை. அதற்கடுத்தது குமரி. அங்கு நல்ல கோட்டையும் துறைமுகமும் உண்டு. ஈண்டுப் புண்ணியத்தை உத்தேசித்த யாத்திரிகர்கள் பிரமசாரிகளாய் நீராடற் பொருட்டுக் கூடுகின்றனர். பெண்டிரும் ஆடவரும் இக்கூட்டத்திலுண்டு; முன்னர் ஒரு தேவி இவ்விடம் வந்து மாதமொருமுறை நீராடியதாகப் புராணங்கள் கூறும்." (Periplus by W. Vincent.)

வைக்கரை கோட்டயத்திற்குப் போகும் இறங்கு துறையிலுள்ளதோரூர். இதனை யவனாசிரியர்களெல்லாம் பக்கரே (Bakarei) என்றெழுதி இருந்தவிடந் தெரியாது மயங்கினர். இம் மயக்கத்தை முதன் முதல் தீர்த்து வைத்தவர் வெ. கனகசபைப் பிள்ளையாவர். அவர் எழுதியுள்ளதிலிருந்து இப்பொழுதுள்ள கொச்சி முதலிய நாடுகள் கலி 3100 ஆகிய கி. பி. முதல் நூற்றாண்டில் இருந்ததில்லை என்பதும், பெரியாற்றின் முகத்துவாரத்திலுள்ள முசிரி (அகம். 148) கடற்றுறைப் பட்டினமாகவே விளங்கிற் றென்பதும் வெளியாகும்.

(2) செம்மலை: வர்க்கள்ளி என்று சொல்லப்படும் சிவப்புக் கற்கள் நிறைந்த விடம். இது 8°42'N அக்ஷாம்சத்திலிருக்கிறது.

பாளியா[3] (*Paralia*) என்ற பேருடைய நாடும், கரையோரமாகத் தெற்கே செல்லுகின்றன. அந்த நாட்டில் முதலிடம் பலிதா[4] (*Balita*) என்று பேர் பெறும்; அங்கே நல்ல

---

(3) பாளியாநாடு: கால்டுவெல் பாதிரியார் தமது திராவிட ஒப்பிலக்கணத்தில் (பக். 96) மூன்று பாளியாக்கள் உண்டென்றும், அவை தாலமியால் கூறப்பட்ட சோழ-ரளியா ஒன்றும், தொரங்கிபரளியா ஒன்றும், பெரிப்ளூஸில் கண்ட பாளியா ஒன்றுமாகு மென்பர். பெரிப்ளூசில் கண்டது ஆய் நாடும் காரி நாடும் ஆகும். அதாவது தென்திருவாங்கூரும் தென்திருநெல்வேலி நாடுமாம். இதனுள் குமரித்துறையும் கொற்கைத்துறையுமடங்கும். பர்னல் (Burnel) சொல்லுகிறபடி திருவாங்கூருக்கு மறுபெயரான புரளி என்பது ஒப்புக்கொள்ளத்தகாதது. கிரேக்கர் தாம் வந்த காலத்துக் கேட்ட நாட்டின் பெயரை அங்ஙனமே தங்கள் பாஷையில் கூறிப் பொருளும் காட்டுவர். அங்ஙனமிருந்ததாகத் தோற்றவில்லை. குண்டர்ட் பேராசிரியர் (Dr. Gundert) தமது மலையாள அகராதியில் கோட்டையம் அரசர்களுக்குச் சொந்தமான ஒரு கோட்டைக்குப் புரளி என்று பெயரென்றும், அவர்களுக்கும் புரளீசன் என்று பெயரென்றும் கூறுவர். இது வஞ்சி பூபதி என்பது போல் இவர்கள் முன்னர் ஆண்ட நாட்டின் ஞாபகார்த்தமாக கொண்டது போலுமென்பர். கனகசபைப் பிள்ளையவர்கள் இதனைப் பற்றி யொன்றும் கூறியதாகத் தோன்றவில்லை. ஆயினும் இதுவே பஃறுளி யாற்றினுட்பட்ட பஃறுளிநாடாகவிருக்கவேண்டுமென்று தோற்றுகிறது. பஃறுளி என்பது பறுளி என்றும் புரளி என்றும் ஆவது இயற்கை. அதனைக் கேட்ட யவனர் பரளியா என்று பேரிட்டழைத்தலும் இயற்கையே. பஃறுளி யென ஓர் ஆறுண்டெனவும் அது குமரிக்குத் தெற்கிருந்ததெனவும் இலக்கியம் கூறும். கால்டுவெல் மேற்றிராணியார் அறியாமையால் அவ்வாறிருக்கக் காரணமில்லை என்று கூறினர். இது பின்னர்க் கடல் கொண்டதென்பது சிலப்பதிகாரம் காடுகாண் காதை, 17—22-ம் அடிகளுக்குள்ள அடியார்க்கு நல்லார் உரை மேற்கோளால் இனிது விளங்கும்.

(4) பலிதா: விழிஞம் விழியம் என்றாகி அத்துச் சாரியை பெற்று விழியத்து என்றாக அதனைப் பலிதாவென யவனர் எழுதினரென்பர் சிவராஜ பிள்ளை. (The Chronology of Ancient Tamils p. 177.) 'வானவரம்பன் வெளியத் தன்ன' என்பது

துறையும் கடற்கரையோரமாக ஊருமிருக்கின்றன. இதற்கப்பால் குமரி[5] யென்றோர் இடமிருக்கிறது; இங்கே குமரி முனையும் துறைமுகமு மிருக்கின்றன. இங்கே தம் பிற்றை நாளைக் கழிக்க விரும்புகிறவர்களும், நீராட விரும்புகிறவர்களும், பிரமசரியம் காக்க விரும்புகிறவர்களும் கூடுகின்றனர்; ஸ்திரீகளும் அதே மாதிரி செய்கின்றனர். அதற்குக் காரணம் இங்கே ஒரு பெண் தெய்வம் வாழ்ந்து நீராடினதாகக் கூறப்படுகின்றது.

59.[1] குமரியிலிருந்து தெற்கே [2]முத்துச்சலாபமிடமூரான கொற்கை வரையில் இந்நாடு பரவுகிறது. (சலா

அகம் 358. திருவனந்தபுரத்துக் கருகில் ஒரு சிற்றூராக விருக்கிறதென்றும், குலோத்துங்க சோழ பட்டணம், இராஜேந்திர சோழப்பட்டணம் என்று பேர் என்றும் எழுதுவர் தேசிகவிநாயகம் பிள்ளை. (கலைமகள், i, 589.)

(5) குமரி: குமரித்துறையைப் பற்றி அதிகமெழுதவேண்டியதில்லை. காசிமுதல் கன்னியாகுமரிவரை என்னும் பழமொழியே போதியதாம். இஃது அன்றுதொட்டே பேர்போனதென்பதற்கு "மாமறை முதல்வன் மாடலனென்போன், மாதவ முனிவன் மலைவளங்கொண்டு, குமரியம் பெருந்துறை கோள்கையிற் படிந்து" என்னுஞ் சிலப்பதிகார (XV 13—15) அடிகளே போதியசான்றும்.

59. (1) உவில்லியம் வின்சென்டு மொழிபெயர்ப்பு:— "குமரியிலிருந்து இந்நாடு கொற்கையான முத்துசலாயம் குளிக்குமிடம்வரை பரவுகிறது; சலாபம் அடிமைகளாலேனும் சிரத்சேத தண்டனையாளர்களாலேனும் செய்யப்படுகிறது; இக்கண்டத்தின் தென்பாகமெல்லாம் பாண்டிய நாட்டின் ஒரு பகுதியாகும். கொற்கையை விட்டவுடன் காணப்படுவது அர்காலஸ் வளைகுடா. இதே பேருடைய நாடொன்று உள்நாட்டிலிருக்கின்றது. இங்கேதான் எபிதோரஸ் (Epidorus) என்ற தீவில் குளிக்கப்படும் முத்துக்கள் முழுமையும் துளையிடப்பட்டு வாணியத்திற்குத் தயாரிக்கப்படுகின்றன; இத் தீவிலிருந்தே முத்துக்கள் கோத்து நெய்த மஸ்லீன்கள் கொண்டுவரப்படுகின்றன."

(2) முத்துக்கள்: நவரத்தினங்களிலொன்றென்பது யாவருமறிந்தது. இவைகள் கன்னியாகுமரிப் பக்கத்தில் அதிகமாகவும் மீன் புசல் பக்கங்களிற் சிறிதளவும் கிடைக்கின்றன. ஆயினும்

பம் சிறைபாளர்களால் குளிக்கப்படுகின்றன). இந்நாடு

இந்நாட்டைத் தவிர அரேபியா பக்கத்திலும் முத்துக்கள் உண்டென்று கூறுவர். முத்துக்கள் சிப்பிகள் என்னும் ஒருவகை மீன்களிலிருந்து எடுக்கப்படுகின்றன. அம் மீன்களின் செதில்களினிடையில் மணல் முதலியவை புகுந்து உறுத்த அவைகளைச் சுற்றிச் சதை வளருகிறதென்பர் இக்காலத்தார். சுவாதி நக்ஷத்திரம் உதயமாகும் காலத்தில் விழும் மழைத்துளியை உண்ட மீன் வயிற்றில் இத்துளி முத்தாகிறதென்பர் பெரியார். முத்துக்கள் நிலத்திலும் நீரிலும் கிடைக்கும். நிலத்திற் கிடைப்பவற்றைத் தலசம் என்றும், நீரில் கிடைப்பவற்றைச் சலசம் என்றும் சொல்வர். பூமியில் உண்டாகுமிடங்கள் மூங்கில், பாம்பின் தலை, பன்றிக் கொம்பு, நெற்பயிர், கரும்பு, யானைக்கோடு; நீரில் சங்கு, மேகம், சிப்பி, மீன்தலை; இவைகளோடு சிங்கம், ஸ்திரீகள் கண்டம், கொக்கின் கழுத்து என்பவற்றிலும் கிடைக்குமாம். இவற்றின் விரிவைப் பரஞ்சோதி திருவிளையாடல் மாணிக்கம் விற்ற படலம் 53-வது செய்யுள்முதல் வருஞ் செய்யுள்களிற் காணலாம்.

பிளினி (Pliny) என்னும் யவனாசிரியர் பின்வருமாறு கூறுகிறார்: 'அலெக்ஸாந்திரியா பிடிபட்ட பிறகே முத்துக்கள் உரோமில் அதிகமாக உபயோகத்துக்கு வந்தன. ஆயினும் அவைகள் முதன் முதலாகச் சில்லா (Cylla) வின் காலத்திற்றான் தெரிந்தது. விலையுயர்ந்த நவரத்தினங்களுள் தலைமை யடைந்திருந்தது முத்தே . . . . அதிகமாக இது தாம்பிரபரணித் தீவில் கிடைக்கிறது. நான் ஒரு சமயத்தில் கெயஸ் (Caius) சக்கரவர்த்தியின் ராணியான லோலியா பாலினு 400,00,000 (நாலு கோடி) செகஸ்டர் விலையுள்ள முத்தும் மரகதமும் தன் காது, கழுத்து, தலை முதலான விடங்களிலெல்லாம் அணிந்திருந்ததைக் கண்டேன். கிளியோபாட்ரா அந்தோனி என்பாள் ஒரு கோடி விலை மதிப்புள்ள விருந்தொன்று நடத்துவதாகக் கூறி அந்தப்படி செய்தவிருந்தில் விலையுயர்ந்த முத்தொன்றைக் காடியில் கரைத்துக் கொடுத்தாள்'. இதுமாதிரியாக யவனர்களே அதிகமாக முத்துக்களை முற்காலத்தில் விலைக்கு வாங்கினர் என்று தெரிகிறது.

பாண்டியருக்குச் சொந்தம். கொற்கைக்குமேல்[3] வளை குடாப்புறமாகக்[4] கரைநாடொன்று[5] போகிறது; இந்த நாட்டிற்கு உள்நாடு ஒன்றிருக்கிறது. அதனை அர்கரு[6] (*Argaru*) தேசமென்று கூறுவர். இந்தப் பக்கமுள்ள

---

(3) கொற்கை: இது தென் சமுத்திரக்கரையிலிருப்பது. அந்நாளில் பாண்டிய இளவரசனின் இருப்பிடமாகும். முத்துச் சலாபம் ஆங்கு நடந்ததால் அங்கு இளவரசன் வசித்துவந்தனன் போலும். சிலப்பதிகாரம், மதுரைக்காஞ்சி முதலிய நூல்களைப் பார்க்க.

(4) அர்கரு வளைகுடா அல்லது அர்கால வளைகுடா: என்பது திருமறைக்காடான வேதாரண்யத்தின் தென்கோடியாகும். கோடிக்கரையினின்றும் ராமேசுரம் வரையிலுள்ள கடல் என்பர் கால்டுவெல். தாலமி கோரு என்றது இதனை யெனக்கூறி, அது கோடியினின்று, திரிந்த விதத்தையும் காட்டுவர். கனகசபைப் பிள்ளை இதனை ஆர்கலி என்று கொண்டு கடல் என்பர்.

(5) கரைநாடு: தாலமி என்பார் இதனைக் கரையோய் (Kareoi) என்றும் இது திருநெல்வேலிக்குத் தெற்கிலுள்ளதென் றுங் கூறுவர். கரைநாடு என்றதைக் கோஸ்டு கண்ட்ரீ (Coast Country) என்று மொழிபெயர்த்து விட்டனர். கரை என்றும் காரை என்று நீட்டி எழுதவும் மேல்நாட்டு மொழிகளில் ஒரே எழுத்துத்தான் உபயோகப்படுகிறது. அதனால் இஃது இன்ன தென நிச்சயித்துச் சொல்வதற்கில்லை. கரையார் அல்லது பரத வர் நாடு என்பர் சிலர். ஆனால் கொற்கைக்கு மேலுள்ளது சோழ தேசமென்று மேல் நாட்டார் கூறுகின்றனர். ஷாப் என்பார் சோழமண்டலக்கரையிலிருந்து இது கரையென நின்றதென்பர். ஆயினும் மண்டலமென்ற பெயர் உண்டானது பிற்காலத்தே யென்பது சரித்திரக்காரர் அபிப்பிராயம்.

(6) உறையூர்: அப்பாஷையில் அர்கரு (Argaru) என்றெ ழுதப்பட்டிருக்கிறது. இச்சொல் உறையூர் என்பதற்குச் சரியான கிரேக்கமொழி என்பர் ஷாப்.

கடற்கரைகளில் சேகரமாகும் முத்துக்களெல்லாம் அவ்வூருக்கே கொண்டு போகப்படுகின்றன. இவ்விடமிருந்து தான் மற்ற ஊர்களுக்கு அர்கரடிக்[7] (*Argaritic*) என்ற மஸ்லீன் உடை ஏற்றுமதியாகிறது.

60. தமிழகத்திலிருந்தும்[1] வடக்கிலிருந்தும் இந்நாட்டுக்கு[2] வரும் கப்பல் தங்கும் அங்காடிப் பட்டினங்

---

(7) அர்கரடிக் மஸ்லின் : "தஞ்சை திருச்சி ஜில்லாக்களில் நெய்யப்படும் ஆடைகள் வெகு காலமாகப் பேர்போனது ; உரோமுக்கு வந்த நேர்த்தியான துகில்கள் சோழ தேசத்திலிருந்து தான் வந்திருக்கவேண்டும். இந்தியாவின் இப்பாகத்திலிருந்து தான் மூகம்மதிய ராஜாங்கத்தில் அதிக ஆவலோடு வாங்கிய சரிகை வேலை செய்த துகில்கள் வந்தன" என்பர் ஷாப்.

பலவிதமான ஆடைகளிருந்தனவென்றும், பட்டில் 30 விதமிருந்தன வென்றும் கூறுவர் டாக்டர் கிருஷ்ணசாமி ஐயங்கார். இந்த அர்கரிடிக் என்பது மதுரையைக் குறிக்கலாமென்றும், அதற்கு ஆதாரம் ரகுவம்சம் VI. 59-வது சுலோகமாமென்றும் கூறுவர். ஆயினும் பத்துப்பாட்டிலொன்றான பொருநராற்றுப் படையில் "நோக்கு நுழைகல்லா நுண்மைய பூக்கனிந், தரவுரி யன்ன வறுவை நல்கி" (81) என்று காணப்படுகிறது. உரையில் 'கட்டிக்கொண்டவர்களைக் கண்ணுற் பார்க்க முடியாத பூவேலை செய்த பாம்புச் சட்டைபோன்ற துகில்' என்பர். முற்காலத்தில் துகில், கலிங்கம் என்ற பெயருடைய நூலினுற் செய்த ஆடைகளிருந்தன. ஆவியன்ன அவிர் நூற்கலிங்கம், கோபத்தன்ன தோயாப் பூந்துகில், காம்பு சொலித்தன்ன அறுவை, கண்பொருபுகூஉ மொண்பூங் கலிங்கம், மென்னூற் கலிங்கம், பட்டு நீக்கித் துகிலுடுத்துத், தூசுடை, அம்மா சூர்ந்த அவிர்நூற் கலிங்கம், என்னுந் தொடர்களை யாராய்க. பட்டினும் பருத்தியினும் ஆடை நெய்தலில் அன்றுமுதல் இன்று வரை சோழதேசமே பேர்போனது என்பர். இன்றும் ஆவியன்ன அவிர்நூற் கலிங்கம் நெய்தலிற் றிறமை வாய்ந்த துகிலி உடையையும் அதுவே பேராய் வாய்ந்த துகிலி என்னும் ஊரையும் கவனிக்க.

60. (1) தமிழகம் என்று இந்தப் புத்தகத்தில் கூறியிருப்பதெல்லாம் சோநாட்டைத் தானென்று கொள்ளவேண்டும். அப்படிக் கொண்டால் பல தொடர்களுக்குப் பொருள் விளங்கும்.

(2) இந்நாடு : உறையூர் நாடான சோழ தேசம்.

களும் துறைமுகங்களும் பல இருக்கின்றன. அவை பின்வருமாறு வரிசையாகவிருக்கின்றன: முதலில் கமரா[3] (*Camara*), பிறகு படுகா[4] (*Poduca*), பிறகு சோபத்மா[6] (*Sopatma*); இவற்றிற்கும் தமிழகத்திற்கும் நாட்டுக் கலங்கள் செல்லுகின்றன; ஒரே மரத்தில் செய்யப்பட்ட சங்காரா[5] வென்ற மரக்கலங்களும் இருக்கின்றன; ஆயினும் கிரிசே, கங்கை நாடு இவற்றிற்குச் செல்பவை பெரியன

---

(3) **கமரா :** காவிரிப்பூம் பட்டினம்.

(4) **படுகா :** ஷாப் புதுச்சேரியென்பர். புதுச்சேரி பிரெஞ்சுக்காரர் வந்த பிறகு உண்டான பட்டினம். படுகை யென்றசொல் யவன மொழியில் நீட்டி யெழுதப்பட்டிருக்கிறது. இது பரங்கிப்பேட்டை யல்லது கூடலூராகவிருக்கவேண்டும்.

(5) **சங்காரா : சங்ஙாடா :** மலையாளக் கரையில் சங்ஙாடம் என்ற படகு வகை இன்றும் வழங்கும். சலங்கை யென்றொரு வகைத் தோணி உண்டு.

(6) **சோபத்மா :** சோ - அரண், எயில்; எயிற் பட்டினம். இது இப்பொழுது மரக்காணம் என்று வழங்கும். சிறுபாணாற்றுப்படையில் வரும் 'படுவிற் பட்டினம் படரின்' என்பது இதனையே குறிக்கும். இது 'திருமன்னிவளர இருநிலமடந்தையும் .... தண்டாற் கொண்ட கோபரகேசரி பன்மரான ஸ்ரீ இராஜேந்திர சோழ தேவர்க்கு யாண்டு எட்டாவது ஜயங்கொண்ட சோழமண்டலத்து ஓய்மா நாட்டுப் பட்டின நாட்டுப் பட்டிநத்து ஸ்ரீபூமீஸ்வரமுடைய மஹாதேவற்கு........' என்றும், 'திருமகள் போல...... ஸ்ரீ கோவிராஜ ராஜ ராஜ கேசரிவர்மர்க்கு யாண்டு பதினேழாவது அருமொழி மூவேந்த வேளார் ஓய்மா நாட்டுப் பட்டின நாட்டு பட்டினத்திருந்து ஊர்களை வினவாநிற்க........' என்றும், 'எயிற் பட்டினமான விக்கிரம சோழச் சதுர்வேதி மங்கலம்' என்றும், 'எயிற்பட்டினத்து மகாஸபையோம்' என்றும் மரக்காணத்திலுள்ள சிவன் கோயில் கல்வெட்டுக்களிற் காணப்படுவதால் தற்போதைய மரக்காணந்தானென்பது நிச்சயமாகும்.

வாய்க் கொலந்தியா (*Colantia*) வெனப் பேர்பெறும் முற்கூறிய விடங்களில் தமிழகத்திற் செய்யப்பட்ட எல்லாப் பண்டங்களும், எகிப்திலிருந்து வரும்பண்டங்களிற் பெரும் பாகமும், பாளியாவிலிருந்து வரும் பண்டங்களும் இறக்குமதியாகின்றன.

61. இதனை யடுத்துள்ள நாட்டின் போக்கு[1] கீழ் முகம் செல்ல, மேல்புறம் முன்னோரால் தப்ரபேனி[2] (*Taprobane*) என்று சொல்லப்பட்ட பலிசிமுந்து[3] (*Palaesimundu*) தீவுஇருக்கிறது. இதன் வடபாகம்[4] ஒரு நாட் பயணமுடையது; தென்பாகம் மேல்புறமாக நீண்டு மெதுவாக அவஸீனியாக் கரையை யெட்டிப் பார்க்கிறது. இங்கே முத்து, அரதனங்கள், மஸ்லீன், ஆமையோடு என்பவைகள் உண்டாகின்றன.

62. இவ்விடங்களுக்குச் சமீபமாக மஸேலியா[1] (*Masalia*) என்ற பிரதேசமிருக்கிறது. இஃது உள்நாட்டுக்கு எதிரில் கடற்கரையில் வெகுதூரம் பாவியிருக்கிறது. அங்கே அதிக மஸ்லீன்[2] நெய்யப்படுகிறது. இத்தேசத்திற்

---

61. (1) நாட்டின் போக்கு: பெரிபுளூஸை எழுதியவர் முசிரி, வைக்கரைக்கு இப்பால் வராமல் பிறர் சொல்லியதைக் கேட்டே எழுதியவரென்பது அறிஞர் பலர் அபிப்பிராயம்.

(2) தப்ரபேனி: சிங்களத் தீவான சிலோன் (Ceylon).

(3) பழசை முந்து: பாலி சீமந்தி என்ற வடமொழியின் மரூஉ என்பர். இது சிலோனையே குறிக்கும்.

(4) வடபாகம்: வேதாரணியம் கோடிக்கரையிலிருந்து சிங்களத்துக்குப் போவதாக இது குறிக்கிறது. வடபாகம் யாழ்ப்பாணம். தென்பாகம் அனுராதபுரம், கொழும்பு முதலான இடங்கள்.

62. (1) மஸேலியா: மசூலிப்பட்டணம்.

(2) மஸ்லீன்: ஆஸ்கா, உப்பாடை, உடை முதலியனவற்றைக் குறிக்கும்.

கப்பால் கிழக்கு நோக்கிக் கடலைக் கடந்தால் தோசரினி[3] (*Dosarene*) என்ற பிரதேசமிருக்கிறது. இங்கிருந்து தொசரினிக் என்ற தந்தம் கிடைக்கிறது. இதற்கப்பால் நாடு வடபுறமாய்ச் செல்லப் பல முருட்டுச் சாதியினர் அங்கு வசிக்கின்றனர். அவர்களுள் ஒருவகையினர் தட்டை மூக்குள்ள காட்டு மிராண்டிகளான கிராதா (*Cirrhadae*) என்பார்; பர்கஸி (*Bargysi*) யென்போர் மற்றொரு வகுப்பினர்; குதிரை முகம், நீண்டமுகமுடைய பிணந்தின்னிகள் ஒரு வகுப்பினர்.[4]

63. இதற்கப்பால்[1] கரை மறுபடி கீழ்புறம் திரும்புகிறது. கடலை வலது புறமாகவும் கரையை இடது புறமாகவும் வைத்து நாம் சென்றால் கங்கைநாடு தோன்றுகிறது; அதற்குச் சமீபமாகக் கடையிடமான கிரிஸே தீவு[2] (*Chryse Island*) இருக்கிறது. கங்கை நாட்டுக்குச் சமீபத்தில் நீலநதியை யொத்த கங்கையாறு உற்பத்தியாகி ஓடிவருகிறது. அதனுடைய கரையில் கங்கை[3] யென்ற பேருடைய அங்காடிப்பட்டினமுண்டு; இது வழியாகப் பச்சிலை, கங்கை நாட்டுச் சடாமாஞ்சி, முத்து, கங்கை நாட்

---

(3) தோசரினி: இது ஒரிசாவென்று பலர் கருதுகின்றனர். அவர்கள் மூல ஏட்டில் மசூலியாவிலிருந்து 'கிழக்கு நோக்கிக் கடலைக் கடந்தால்' எனக் குறிப்பதைக் கவனிக்கவில்லை. இது பர்மா, சீனு முதலிய தேசத்தைக் குறிக்கும். அதற்கப்பாலுள்ளோரே தட்டை மூக்குடையோர்.

(4) சீய தேசத்தினரை நீண்ட முக முடையவராகக் கூறுவர் மார்க்கோ போலோ.

63. (1) இதற்கப்பால் என்றது மசூலிப்பட்டணத்திற்கப்பால்.

(2) கிரிஸே: இக்கிரேக்கச் சொல்லுக்குப் பொன் என்று பொருள். ஸ்வர்ண பூமியெனப்படும் சாவகம்.

(3) கங்கை: இதுபொழுது தாம்லூக் என்று கூறும் தாமிரலிப்தி என்ற ஊர்.

டுடை என்ற மிக நேர்த்தியான மஸ்லீன் என்பவைகள் வரு கின்றன. இவ்விடங்களுக்கு அருகில் தங்கச் சுரங்கங்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. கல்டிஸ் (*Caltis*) என்ற பொன்நாணயமொன்று வழங்குகிறது. சூரியன் உதய மாகுமிடத்திற்குக் கீழ் ஜனங்கள் வசிக்கும் கடைசி பூமி யான ஒரு தீவு இந்த நதிக்கு எதிரில் இருக்கிறது; அதற் குக் கிரிஸே என்று பெயர்; எரித்திரேயன் கடலில் உள்ள ஊர்களில் அகப்படும் ஆமையோடுகளில் அங்கு அகப்படு வது முதற்றரமானது.

64. வடக்கில் இந்தப் பிரதேசத்திற்கப்பால் வெளிட் புறமுள்ள கடல் திஸ்[1] (*This*) என்ற நாட்டில் முடிகிறது. அங்கு தினே (*Thinae*) என்றொரு பட்டணமிருக்கிறது; அங்கிருந்து பாரிகசாவிற்கு, பாக்திரியா வழியாகக் கால் நடையாகவும், தமிழகத்துக்குக் கங்கையாறு வழியாகக் கப் பல் மூலமாகவும் கோராப்பட்டு, பட்டு நூல், பட்டுத் துணி இவைகள் வருகின்றன. திஸ்தேசம் நாம்செல்லக்கூடியதல்ல. அங்கிருந்து வருபவரும் மிகக்குறைவு. இந்தத் தேசம் துருவநக்ஷத்திரத்துக்குக்கீழும் போண்டஸ், காஸ்பியன் கடல் இவற்றுக்கு அப்பாலுமிருப்பதாகச் சொல்லப்படு கிறது. இதற்கப்பால் மியோடிஸ் ஏரி *Lake Maeotis* இருக்கிறது; இவைகளெல்லாம்சமுத்திரத்தில் விழுகின்றன.

65. ஆண்டாண்டு தோறும் திஸ்நாட்டு எல்லையில் சிறிய உடலும் அகன்று தட்டையான முகமும், நல்ல சுபாவமுமுள்ள ஒரு சாதியினர் வருகின்றனர். அவர்களைப் பிஸதி (*Besatae*) சாதியினர் என்கின்றனர்; அவர்கள் நாகரிகமற்றவர்கள். அவர்கள் தம் பெண்டு பிள்ளைகளோடும் திராட்சையிலைபோன்ற ஒருவகை இலையால் முடைந்த

---

64. (1) த்ஸின் (TS'in) என்ற சீன தேசம்:

கூடைகளிலும் மூட்டைகளிலும் பண்டங்கள் கொண்டும் வருகின்றனர். அவர்கள் தங்கள் நாட்டிற்கும் திஸ் நாட்டிற்கும் இடையில் சந்திக்கின்றனர். அங்கே அவர்கள் அக்கூடைகளைப் பாயாக விரித்துக்கொண்டு பல நாளிருந்து விருந்து நடத்திப் பின்னர் உள் நாட்டுக்குத் திரும்புகின்றனர். பின்னர் அவர்கள் திரும்பிப் போவதைப் பார்த்துக் கொண்டிருக்கும் நாட்டு மக்கள் அப்பாய்களைச் சேகரிக்கின்றனர். அப்பாய்களிலிருந்து பெட்ரி (*Petri*) என்ற நார்களைப் பிரித்தெடுக்கின்றனர். அவர்கள் பாயிலுள்ள இலைகளை ஒன்றன்மேலொன்றாக நெருக்கியடுக்கி உருண்டையாகச் சுருட்டி ஒலி நாரினால் குத்திக் கட்டுகின்றனர் அவை மூவையாகப் பிரிக்கப்படுகின்றன. பெரிய இலைகளாலானவை பெரிய உருண்டைப் பச்சிலையென்றும், சிறிய இலைகளாலானவை நடுத்தர உருண்டையென்றும், மிகச் சிறிய இலைகளாலானவை சிறு உருண்டையென்றும் சொல்லப்படும். இவ்வாறு மூன்றுவகைப் பச்சிலையுண்டு; இவைகளைச் சேகரிக்கும் அந்த ஜனங்களே அவற்றை இந்தியாவுக்குக் கொண்டுவருகின்றனர்.

66. இவைகளுக் கப்பாலுள்ள பிரதேசம் அதிகக் குளிராலுமோ மழையாலுமோ அன்றித் தெய்வக்கோட்பாட்டாலோ செல்ல முடியாத தேசமாகவிருக்கிறது.

முற்றும்.

Printed at The Royal Printing Works, Mount Road, Madras.